தென்றல்

ஆசிரியர்:— கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணு. | வெளிநாடு மூன்றணு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 3 | சென்னை | 24—11—56 | சனிக்கிழமை | இதழ் 13

நான் எந்தத் தொகுதி?

"நீ எந்தத் தொகுதி?"

"நான் இந்தத் தொகுதி..."

"அடேயப்பா! அந்தத் தொகுதியில் நிற்பதென்றால், ஏராளமாகச் செலவாகுமே?"

"ஆகும்! ஆனால் ஆகாமலேயே காரியம் பார்க்கவும் முடியும்!"

"அதெப்படி?"

"இதென்ன கேள்வி! சிலர் வெல்வதற்குப் பணம் தேவை. சிலருக்குக் கொள்கை உறுதி தேவை. பின்னது எங்களிடம் இருப்பதாக நாங்கள் கருதுகிறோம்."

"என்னவோ, எனக்கு நம்பிக்கை இல்லை. பேசாமல் சுலபத்தில் வரக்கூடிய ஒரு இடத்தில் போட்டி போடுவது நல்லது!"

"அதாவது எவனாவது ஒரு அப்பாவியைத் தோற்கடிப்பது நல்லது என்கிறீர்கள்! பரம்பரை அரசியல் சூதாடிகளை அப்படியே விட்டுவைக்கச் சொல்கிறீர்கள்!"

"அட, என்ன தம்பி, நீ! அவன் அரசியல் சூதாடட்டும்; என்ன வேண்டுமானாலும் செய்யட்டும்! பணம் வைத்திருக்கிறான்; ஊர் ஊராக ஆள் வைத்திருக்கிறான். அதற்குமுன்னால் நீ என்ன செய்ய முடியும்?"

"என்ன முடிகிறதென்று, கொஞ்சம் பொறுத்துத்தான் பாருங்களேன்!"

"அதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், நீ நமக்கு வேண்டிய பிள்ளையாயிற்றே என்பதால் சொல்கிறேன். மலையோடு மோதினால் மண்டை தானே உடையும்?"

"உவமை பழையதானாலும் நன்றாயிருக்கிறது. ஆனால், பொருத்தமாக இருக்கவேண்டாமா? மண்ணை மலையென நீங்கள் நம்பி வந்திருக்கிறீர்கள். அது மலையல்ல; மண்ணே என்பதை நிரூபிக்க நான் முயல்கிறேன்!"

"இதெல்லாம் பேச்சுக்கு அழகாயிருக்கும் தம்பி. அவரோ மந்திரி. அந்தத் தொகுதியில் அவர் நிறையச் செலவழித்திருக்கிறார். நீயும் அவரும் ஒரு சாதிதான் என்றாலும், உங்கள் சாதியிலேயே அவரிடம் தான் எல்லோர்க்கும் பிரியம்! வெறும் 'தியரி' பேசிப் பிரயோசனம் என்ன? 'பிராக்டிக்க'லாக நினைக்கவேண்டாமா?"

"மக்கள் அவரிடம் பிரியம் வைத்திருப்பதை எப்படிக் கண்டீர்கள்?"

"அதான் தெரிகிறதே! அவர் பெயரைச் சொன்னாலே போதுமே..."

"சிரிப்பார்கள் என்கிறீர்களா!"

"சும்மா இரு தம்பி! அவர் அந்தத் தொகுதிக்கு வந்தால் போதும்..."

"உதைப்பார்கள்! இல்லையா?"

"ஏன்? எதற்காக உதைக்கிறார்கள்? சும்மா பேசிவிட்டால் ஆச்சா! உங்களுக்கெல்லாம் துடி துடிப்பு இருக்கிறது. அது மட்டும் இருந்து என்ன பிரயோசனம்! எதை எப்படிச் செய்வது......எப்படிப் போனால் எது நடக்கும் என்பதெல்லாம் அவர்களுக்குத் தானே தெரியும்!"

"ஆமாம்; ஆமாம்! கொல்லை வழியை நன்றாக அறிந்தவர்கள் அவர்கள்தான்!"

"சரி, சரி! நீ விளையாட்டுப் பிள்ளை! இப்போது உனக்குப் புரியாது. ஜாமீன் போனால்தான் புத்தி வரும். என்னமோ, உங்கள் கட்சித் தலைவர்கள் ஆங்காங்கே ஜெயிக்கக் கூடிய இடத்தில் நின்றுகொண்டு, உன்னைக் கிணற்றில் தள்ள நினைக்கிறார்கள். அவ்வளவுதான் நான் சொல்லுவேன். நீ நம்ம சாதியிலே நன்றாக வந்துகொண்டிருக்கிறாய். நீ எந்தக் கட்சியில் இருந்தாலும் உன்னையும் ஒரு எம். எல். ஏயாகப் பார்க்க வேண்டுமென்பதுதான் எங்கள் ஆசை. நாளைக்கு உனக்கு ஏதாவது காரியம் ஆகவேண்டியிருந்தால் கட்சிக்காரர்கள் ஒன்றும் வரமாட்டார்கள். நீ போய் யாரை மோதப் போகிறாயோ, அவரும் நாங்களும் தான் வரவேண்டும். பார்த்துக்கொள்ளப்பா! பிறகு உன் இஷ்டம்!"

"அண்ணே! இதுவரைக்கு, நான் நம்ம சாதிக்காரர்கள் உதவியை எதிர்பார்த்ததில்லை. சம்பாதிக்கத்திறனில்லாவிட்டால்தானே யாருடைய தயவையும் நான் எதிர்பாக்கவேண்டும்? நான் நினைத்தால், நாளொன்றுக்கு ஆயிரம் ரூபாய் சம்பாதிக்க முடியும். எனக்கு எதற்கு பயம்? அரசியலில் ஒரு கூட்டம் தொழில் நடத்திக்கொண்டிருப்பதை எத்தனை நாட்கள் அனுமதிப்பது? யாராவது துணிந்து மணி கட்டித்தானே ஆக வேண்டும்? அந்தப் பணியை நான் ஏற்றுக்கொள்கிறேன். வெற்றி தோல்வியைப் பெரிதாக நினைப்பவர்களுக்குத்தான் வேதனை. எனக்கு அதைப் பற்றிக் கவலையில்லை. வென்றாலும் தோற்றாலும் நாட்டுக்கு என் பணி தொடர்ந்து கிடைக்கும்! ஆனால்......எந்தக் காரணத்தை முன்னிட்டும் நான் அந்தத் தொகுதியில் நிற்பதினின்றும் விலகமாட்டேன்!"

"சரி! அப்படியானால் ஒன்று செய். நீ அதே தொகுதியில் பார்லிமெண்டுக்குப் போடு! ரெண்டு பேருக்குமே வாய்ப்பிருக்கும்!... என்ன?"

"பார்லிமெண்டிற்குப் போய் நான் என்னண்ணே செய்யப் போகிறேன்! ஏன், அந்தப் பெரியவரே பார்லிமெண்டுக்குப் போடட்டுமே?"

"என்ன தம்பி இது! வல்லடி வாதம் பண்ணலாமா! அதுவும் எங்கிட்டே! நீ?"

"பேசுறதுலெ பிரயோசனம் இல்லை! நான் கண்டிப்பா அந்தத் தொகுதியிலே போடத்தான் போறேன்! வர்றது வரட்டும்! அண்ணா சொன்னதுபோல், எதையும் தாங்கும் இதயம் உண்டு!"

"சரி சரி! தாங்கித்தானே ஆகணும்! வேறெ வழி! இது என்ன பொழக்கிற புள்ளை பேசுற பேச்சா? கையிலெ இருக்கிற நாலு காசுக்கும் சனியன் புடிச்சுதுன்னு அர்த்தம்! செய்யி! பாப்பம்! நாங்களெல்லாம் ஒன்னை எதித்துத்தான் வேலை செய்யவேண்டியிருக்கும்!"

★

...'பெரிய தலை'களை எதிர்த்து நம்மவர்கள் போட்டிபோட முயலும் இடங்களிலெல்லாம் இதுபோன்ற பேச்சுக்கள் நடைபெறலாம். 'நடைபெறலாம்' என்று நான் சொல்வதற்குக் காரணம், ஒவ்வொரு தேர்தலிலும் காங்கிரசுக்காரர்கள், இப்படி, எதிரிகளை அணைபோட்டுத் தடுக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள்; அதனால், இந்தத் தேர்தலிலும் அது நடைபெறலாம் என்பதால்தான்!

ஆனால், கழகத் தோழன் சொல்லும் ஒரே வார்த்தை "எதையும் தாங்கும் இதயம் உண்டு!"

ஏனென்றால், தி. மு. கழகம் தேர்தலிலே நிற்கத் துணிந்தது, யாருக்கும் தெரியாமல் நாலு பேரைக் கூட்டி ஒரு ரகசியக்கூட்டம் நடத்திவிட்ட பிறகு அல்ல! மூன்று மாதங்களுக்கு முன்பே [illegible]வுறுத்தி, 'என்ன சொல்கிறீர்கள்? நிற்கலாமா?' என்று வாக்காளர்களையே கேட்டு அவர்களின் பெருமிதமான ஆதரவுகளைப் பெற்றுக் கொண்ட பின்னர்தான் தி. மு. கழகம் தேர்தலில் கலந்துகொள்ளப் போவதை அதிகாரப் பூர்வமாகப் பிரகடனப்படுத்தியது. முதல் இவ்வளவு, சிப்பந்திச் செலவு இவ்வளவு, என்று லாப நஷ்டக் கணக்குப் போட்டுப் பார்த்துக் களத்திலே கால் வைக்கும் வாணிப நோக்கு கழகத்திற்குப் பிடிக்காத ஒன்றாகும். கையிலே காசில்லாவிட்டாலும், மனதிலே மாசில்லாததாலேதான் அச்சமும் பீதியும் கழகத்தைச் சாடவில்லை. தங்களைப் பெரிய கட்சிகள் என்று கருதிக் கொண்டு அகிலத்தைப் பற்றியே பேசிக் கொண்டிருப்போர் கூட நினைத்துப் பார்க்கமுடியாத அளவுக்கு '150 இடங்களில் போட்டியிடுவோம்' என்று அறிவித்துவிட்டு கம்பீரமாக, தி. மு. கழகம் நடை போட்டுக் கொண்டிருப்பதற்குக் காரணமே, கழகத்தின் தூய்மையும், கொள்கைப் பற்றும், எதையும் தாங்கக்கூடிய நெஞ்சுரமும்தான்.

வெற்றி தோல்வியைப் பற்றி கழகம் கவலைப்படுவதாக இல்லை. வந்தால், கொள்கை வென்றது, நாடு விழித்துக் கொண்டது என்று பொருள். போனால், இன்னும் தமிழகம் இருட்டறையிலேயே இருக்கிறது என்று பொருள்.

கழகம் தொடர்ந்து பணியாற்றும்.

நெஞ்சங் கவர்ந்த நேரிழையாள் !

நைந்து போன நெஞ்சின் சோகப் புலம்பல் இங்கே எழுத்துருவில் வடிக்கப்பட்டிருக்கிறது. திருவனந்தபுரம் தோழர் மாதவன் சிறிய சம்பவமொன்றை உருவகமாகத் தீட்டியிருக்கிருர். எளிய நடை! புதிய பாணி!

பெருமழை மாறி தூரலாகி தூரலும் ஓய்ந்திருந்ததென்று தோன்றியது. மெல்லிய குளிர் காற்றுதான். இதையெல்லாங்கூட லட்சியம் செய்வதென்ருல் எப்படி முன்னேறுவது ?.... பரவாயில்லே. நடப்போம். பாதையெங்கும் சேறும் சகதியுமாக குழம்பிற்று. அப்படித்தான் இருக்கும். மழை பெய்வதற்கு முன்னல் எவ்வளவோ பொழுதும் சாவகாசமும் இருந்தும் புறப்படவில்லே. இப்பொழுது போக்கிவிட்ட பொழுதைப்பற்றி எண்ணுவதில் பயன் இல்லே. கடைசியாகத் தெரியும் நீரோடையில் காலேக் கழுவிக்கொள்வது. இந்த எண்ணத்துடன் நடந்தேன்.

இனிக் கூடாது. எதிலுமே போய் வலியத் தொட்டு கூட்டுவைத்துக் கொள்ளலாகாது. பாடம் பாடம், என்ருல் சாதாரணமா, சுட்டத் தழும்புபோல நன்கு பதிந்த பாடம்! அது என்றும் தனித்துத் தெரியும் வெள்ளேத் தழும்பாக கண்ணில் பட்டுக்கொண்டே யிருக்கும். அருவருப்புத் தோன்றும். திருந்திய நடைக்கு ஊக்கமும் தரும்.

கணங்காலுக்கு மேல் சகதியில் உடலே நடுக்கும் வாடைக் காற்றில் அப்படி நடக்கையில்-நெடுந் தொலேவு நடக்கவும் வேண்டும். மனம் சூடான எதற்காகவோ தாவுகிறது. பழைய எண்ணங்கள் கொஞ்சம் இருந்தன. அந்த வெண்ணிற தழும்பிற்கு காரணமான எண்ணங்கள் தான்! தழும்புதான் தழும்பாயிற்றே அந்த எண்ணங்களேக் கொஞ்சம் அசை போடுவோமே என்றெண்ணியது மனம். குளிரும் தோன்ருது மனம் குறளிதானே...

கால்கள் சகதியைக் கிழிக்கொண்டு முன்னேறுகின்றன. ஒருவேளே; மனம் முன்னேறுவதும் சகதியைக் கிழித்துக் கொண்டாக இருக்கலாம். சிழ்கொட்டிய சிறங்கே ஆயினும் ஊரல் பொறுக்க முடியாதபோது சொரிந்து விடுவது இதமாக இருக்கிறதல்லவா ?

மனம்...

...ஒரு...ஒரு பெண் அப்படி அழகாகப் படுத்து உறங்குகிருள். சின்ன வெண்சிப்பி கவிழ்த்து வைத்ததுபோல இருவிழிகளேப் போர்த்தியிருக்கும் இமைகள். அந்த காட்சியை கண்டதிலிருந்து ஆரம்பித்தது. அழகான பெண். நல்ல நிறம். நல்ல கண்கள். நல்ல நடை. நல்ல சிரிப்பு... முதலில் பெண் என்று பார்த்தேன். பிறகு பூவென்று எனக்காக வைத்துக்கொள்ள ஆசைப்பட்டேன். உரிமை கொண்டவன் வேறு ஒருவன் இருந்தான். உரிமைக்குமேல உடமை வைப்பதெப்படி ?

இந்த எண்ணங்கள் என்ருல் மனதிற்கு எவ்வளவு துடிப்பு. உயிருள்ள மூக்குமீனே கையில் பிடித்திருக்கும் சிரமம்போல குலேந்து குலேந்து வழுக்கி விழுந்து நீந்திப் புரளுகிறதே...

சுவரோரத்தில் படுத்துக் கொண்டு; 'இவளே நான் விரும்புகிறேன்...இவளே நான் விரும்புகிறேன் என்று பென்சிலால் நிறைய எழுதிவிட்டு கடைசியில் கையால் அழுத்தி தேய்த்து அதைப் போக்க நினேத்தபோது, வெள்ளேச்சுவரில் ஒரு கறுப்புப் படலம் கோலமாகியது.

"இராவெல்லாம் சுவரிலே என்னத்தெ எழுதி அழிச்சே ?" என்று காலேயில் அவள் கேட்டபோது "உன்னே விரும்புகிறேன்" என்று சொல்லவில்லே.

நாட்கள் கழிந்து கழிந்து உதிர்ந்தபோது கால்முட்டளவு-அல்லது இடுப்பளவு சருகு சேர்ந்திருந்தது. ஒரு நாள் இரண்டுநாள் முயற்சியால்கூட அத்த சருகை அகற்றிவிட முடியாது.

"நீ இங்கே வாறது நல்லா இல்லே, நீ இங்கு வந்து படுத்து தூங்கறதும் நல்லா இல்லே. நீ ஆம்பிளே. எனக்கு தாலி கட்டியவன் இருக்கான்..."

இடுப்பில் அமர்ந்திருந்த குழந்தை தாலிக் கயிற்றை இழுத்து இழுத்து கடிக்க முயன்றது...

இவளேத் தினமும் பார்க்கவேண்டும். இவளே அருகிலேயே வைத்துக்கொள்ள வேண்டும். இவளேப்பற்றி நிறைய எழுதவேண்டும்" நினேவு நிறைய இவளாகவே இருக்கக் கண்டேன் !

அந்தக் கண்ணடிப் பண்டம் விட்டெரிந்தபோது சுற்றிலும் நெருப்பு சூழ்ந்து, அணிந்திருந்த உடைகளிலும் நெருப்பு கக்கியது போலாயிற்று.

அப்படி அந்தத் தொடர்பு மனப்பாடமாயிற்று.

எண்ணம் புரளுகிறது.

இனியென்ன எண்ணக்கிடக்கிறது ? என்று கேள்வி விளேந்தது. காலில் சிக்கும் சகதிக்கும் குறைவில்லே; போகட்டும். உடலும் குளிர்ந்து ஆடுகிறது.

இதோ சூடான நினேவு.

ஆண்மையற்றுப் போனதுபோல எல்லாவற்றிலும் வெறுப்புத் தோன்றியது. தெருவில் சிதறிச் செல்லும் எல்லா அழகியின் கண்களிலும் உற்றுப் பார்க்கையில் அந்த 'நல்ல' கண்கள் ஒவ்வொன்றிலுமே; 'நீ இங்கே வாறது நல்லாயில்லே" என்ற வார்த்தையின் கடுமை பயங்கர ஈட்டிகளாக ஊர்ந்தன. சீ..!

எல்லாம் வெறுப்பு. கண்களிடம் வெறுப்பு. பேசும் பேச்சுக்களில் வெறுப்பு. நடக்கும் ஒலியில் வெறுப்பு. செய்யும் செயலில் வெறுப்பு. ஆண்மையற்ற சூன்யத்தின் வெறுப்பு.

பின் என்னவாயிற்று ?

மனதிற்கு தாகம், தாகமாக வந்தது இந்த குளிரிலுமா இவ்வளவு தாகம் ? கிடக்கிறது.

பிறகு ?...

ஆமாம் தாகம். அதுவும் ஒருவித தாகமாக இருந்தது. தாகத்தில் பிறந்த சோர்வுதான், அந்த வெறுப்பு என்று தெரிந்தது. எண்ணற்ற காலங்களிளுல் ஏற்படும் மாறுபாடு போலத்தான் அந்தப் புலணர்வும் எட்டியது.

எங்கேனும்...ஏதேனும் காந்தக் கல்லோடு உராய்ந்து தீப்பற்றிக் கொண்டால் அத்தனேயும் எரிந்து சாம்பலாகிவிடும். பிறகு காற்றில் கரைந்து மறையும் நீற்றுப் படலத்தைப்பற்றி யாருக்கென்ன ?

பற்றி எரிய - அப்படி பறந்து அலேந்தேன். எங்கே எங்கே என்று தேடிச்செல்வதைவிட; இங்கே இங்கே என்று கைவிரித்து நிற்கும் சரக்குகளிடம்...

இதெல்லாம், காய்ந்த புதரில்பட்ட சிறு நெருப்பின் பொறி போலத்தான் ஒரு கணத்தில் பிறக்கும். மறுகணம் காட்டுத்தீ ! படர்ந்தெரியும் தீ...

விலே தேடிப் போனேன்.

சட்டையின் பைகளில் நாணயமிருந்தது. மனதில் இருந்ததை எங்கோ புதைத்து விட்டிருந்தேன்.

"புதுச் சரக்காக்கும். இவ்வளவு போதாது"

"இவ்வளவும் எடுத்துக்கொள் சரியா ?" கொடுத்தது போளுல் இருப்பது மிச்சம் என்ற தாராள எண்ணம்! பேரம் முடிந்தபோது கதவு திறந்தது.

அதொரு அறை. கோழிக் குடும்பம் சரியாக வாழலாம். போய் அமர்ந்திருந்தேன்.

முதல் இரவாக்கும்...குத்து விளக்கிருக்கும் மெத்தை விரிப்பிருக்கும்.. வந்து நிற்பாள். புதிய ஆடையின் சலசலப்பு பட்டின்-மலரின் மணம் - சந்தணத்தின் மணம் சாந்துப் பொட்டின் மணம்...பாலும் பழமும் தருவாள். முதலில் என்ன பேசுவது...கையைப் பிடித்து வளேயல் களே எண்ணுவதுபோல் எண்ணி எண்ணி...

இங்கே கிழிந்த ஓலேப்பாயும் வாசலருகில் கால் துடைத்துவர கிழிசல் நாறல் - சாக்குத் துண்டும் வெளியே பாசிபடர்ந்த மண்பானேயில் தண்ணீரும் தகரக் குவளேயும்!

வரட்டும்...காத்துக்காத்து இருந்தேன். அந்த வெறுப்பு-அந்த ஆண்மையற்ற வெறுப்பு இன்னும் சுற்றத்தில் எங்கோ ஏதோ வேலியால் தடைபட்டு நிற்கத்தான் செய்தது.

அகலாத இருள்.

"என்ன, பாலேக் கொடுத்தால் பேசாமெ கெடக்குதா."

என்று ஏசியவாறு ரவுக்கை நுனியை முடிந்துக்கொண்ட வந்த அந்த...

சின்ன வெண்சிப்பி கவிழ்ந்து வைத்ததுபோன்ற இமைகள் அடைந்து உறங்கும் அந்த...

உலகம் சுற்றிக் கொண்டிருந்தது.

"நீ இங்கே வாறது நல்லாயில்லெ...நீ ஆம்பிளெ எனக்கு தாலி கட்டியவன் இருக்கான்..."

"அவுக்கட்டா?"

...அகலாத இருள்.

அந்தத் தாலி இன்னும் மின்னுகிறது.

அகலாத இருளில்...பழி தீர்த்தேன்...நாணயமற்ற மனம், நாதியற்ற வார்த்தைகள், பண்புகள்...அப்படி பழி தீர்த்தேன் !

கருமுகில் கூடிவந்து பெரும்புயலும் மழையுமாக அதிர்ந்தது. மின்னலின் தாக்குதலில் கண்குருடாகிப் போகுமோ என்ற பீதியுடன் நனேந்து நனேந்து உழன்று கடைசியில் சன்னி கண்டு நினேவு தப்பி வேண்டாததையெல்லாம் பிதற்றி விழித்து சுற்றி அலேந்தேன்.

நினேவு தளர்ந்தது.

சுவையான - சூடான எண்ணங்கள் தீய்ந்து புகை கண்டபோது மழையின் கூதல்காற்று உடலே வாட்டத் துவங்கியது.

போதும் இந்த எண்ணங்கள். குளிரிலிருந்து உடலேக் காப்பாற்றிக் கொள்ள காலில் சிக்கிய சகதியையும் கிழித்துக்கொண்டு விரைந்தேன்.

கடைசியாக தெரியும் நீரோடையில் காலேக் கழுவிக் கொள்ளலாமே ?

வாழ்க்கை ஒப்பந்தம்!

'ரூப்ளே' சிலேயிருந்து ஆந்தை ஒன்று அலறியபடியே கலங்கரை விளக்கை நோக்கிப் பறந்தது. அலேகடலுக்கு மேல் அடிவானத்தில் எழுந்து நின்ற முழு நிலவை சிறு கருமேகத் துண்டு ஒன்று மறைத்தது.

ஐந்தாண்டுகளில் புதுவை எத்தனேயோ மாறிவிட்டிருக்கிறதே என்று எண்ணியபடியே கடற்கரைத் தெருவில் நடந்துகொண்டிருந்தேன்.

'கான்டினென்டல்' கடற்கரையில் கம்பீரமாக எழுந்து நின்ற அந்த மதுக்கடையின் வெளிப்புறத்தில்—சாலேயை ஒட்டி—விதவிதமான நாற்காலி மேஜைகள்—வகை வகையாக போடப்பட்டிருந்தன.

இன்னும் சிறிது நேரத்தில் ஒரு சிறு உலகமே அங்கு உருவாகிவிடும்! எண்ணங்கள் இதயத்தில் மிதக்க கட்டிடத்தை கடந்து கொண்டிருந்த என்னே, கட்டிடத்தின் உள்ளிருந்து பல கணி வழியாக தெரிந்த ஒரு உருவம் ஒரு கணம் நிறுத்தியது நின்றேன்—திடுக்கிட்டேன்.

அவன் முகம் நிமிர்ந்தது.

யார்? முத்துவேலஞ?

முத்துவேலன்! என் நண்பன் முத்து வேலனேதான்!

...பிறர் வழுக்கிவிழும்போது கண்டும் காணுதும் செல்லும் மனம், விழுபவர் நமக்குவேண்டியவர் என்று அறிந்தால் அவலக் குரல் இடுகிறதே ஏன்?

முத்துவேலன் கையில் மதுக் கோப்பை இருந்தது. உலகையெல்லாம் மறந்து அதைச் சுவைத்துக் - கொண்டிருக்கும் முத்துவேலனே அதற்கு மேலும் வெளியில் இருந்து கண்டு கொண்டிருக்க முடியவில்லே.

உள்ளே சென்றேன். மதுவை ஊன்றிக் கவனித்தபடி அதை சுவைத்துக் கொண்டிருந்தான்.

எதிரில் அமர்ந்தேன் - அவன் முகம் நிமிரவில்லே.

"சார்" முத்துவேலனின் எண்ணத்தில் மூழ்கியிருந்த என்னேப் பணியாளனின் குரல் விழித்தெழச் செய்தது.

"என்ன சார் வேண்டும்"—பணியாள் கேட்டான்.

"எதுவும் வேண்டாம்பா இவர் எனக்குத் தெரிந்தவர். பார்க்க வந்தேன்"

பணியாள் போகத் திரும்பிஞன். வாயில் மதுக் கோப்பையை வைத்த வண்ணமே பணியாளனே முத்துவேலன் அழைத்தான்.

"சார்"

"பிஸ்கெட்...டு பெக்ஸ்" என்றபடி இடது கையைத் தூக்கி இரண்டு விரல்களே விரித்துக் காட்டிய வண்ணம் கொஞ்சம் தலேயை உயர்த்திஞன்.

அவன் பார்வையில் நான் பட்டிருக்க வேண்டும். மதுவின் மயக்கம்! இன்னும் அவன் அதற்கு அடிமையாகவில்லே போலும். கையில் இருந்த கோப்பையை மேஜை மீது வைத்தபடியே என்னேப் பார்த்தான். அந்தப் பார்வை! நண்பனே—பலநாள் பிரிந்திருந்த நண்பனேப் பார்க்கும் பார்வையா அது! அதில் விடப்பு இல்லே. ஆர்வம் இல்லே. அன்பு இல்லே. இவன் ஏன் வந்தான்? என்ற எண்ணமும் இல்லே. வெறிச் சென்றிருந்தது; அந்த உயிரற்ற பார்வை!

ஏதோ பேசத் துடித்தான். அவன் உதடுகள் மெல்ல அசைந்தன. பின் சிலேபோல ஒரு விஞடி என்னேக் கூர்ந்து பார்த்தான்

..."நீ...நீ—முனிசாமி!"

"ஆமாம்—முனிசாமிதான். தெரிகிறதா என்னே" உணர்ச்சிப் பெருக்கால் பேசிவிட்டேன் போலிருக்கிறது.

நண்பனின் கண்களில் நீர்ப் படலம் கண்டேன். என் நெஞ்சு பிளந்ததுபோல் இருந்தது.

பணியாள் மதுக்கோப்பையை அவன் முன்ஞல் வைத்தான். முத்துவேலன், எதிரில் இருந்த சோடாவை அதில் ஊற்றிஞன். சாராயத்தின் நெடி என்னே என்னவோ செய்தது.—அந்த கோப்பையை நான் கையால் பற்றினேன். முத்துவேலன் கைகள் தளர்ந்தன. அவன் என்னேப் பார்த்தான்.

'அவன் கண்கள் பேசின. சற்று நேரத்திற்கு முன் ஊமையாக இருந்தவை பேசின"

"நீ..." குவளேயை சுட்டியபடி அவன் என்னேக் கேட்டான் நான் சிலேபோல இருந்தேன்.

"உனக்கு" அவன் மீண்டும் கேட்டான்.

"எனக்கு வேண்டாம் இப்போது இது பழக்கமில்லே."

"நல்லது நானும் அதை விரும்பவில்லே. நீ...நீ என் நண்பன்" அவன் உதடுகள் துடிக்க பேசிஞன். அவன் கைகள் கோப்பையைப்பற்றின. நீ மாத்திரம் பருகலாமா நீயும்" என்ஞல் அதற்குமேல் பேச முடியவில்லே. கடந்த காலத்தில் நடந்த சம்பவம் என் கண் முன்ஞல் தெரிந்தது. பள்ளி மாணவஞக இருந்தபோது தீமையின் இருப்பிடமாக நான் இருந்தேன். செய்யத்தகாததைசெய்தேன் என்னே நெருங்கவோ பிறர் வெறுத்த நேரம்-என்னே நினேக்கவே அஞ்சிய நேரம் - அன்று என்னிடம் துணிந்து பழகி, தொடர்ந்து வாழ்ந்து என்னேத் தூய்மை படுத்தியவன் முத்துவேலன். அத்தனே ஏன்? நான் அன்று அந்த நாளில் இவனேவிட மோசமான குடிகாரஞக இருந்தேன். விளேயாட்டில் ஏற்பட்ட பழக்கம் வேதனேயாகும் அளவு வளர்ந்தது. அன்று என்னே அதில் இருந்துமீட்டவன் இவன். முத்துவேலனேத் தவிர அன்று நினைத்திருந்தால்கூட யாரும் என்னேத் திருத்தியிருக்க முடியாது. அத்தகைய முத்துவா இன்று!

நான் மூழ்கிய நேரத்தில் என்னேக் கரை சேர்த்தவன் இன்று நீரில் தத்தளிக்கிருன். நானே அவனே மீட்க வழி தெரியாது இருக்கிறேனே; இதை நினேத்ததும் என் கண்களில் நீர் புரண்டது.

முத்துவேலனின் சிரிப்பொலி என்னே பழைய எண்ணங்களில் இருந்து மீட்டது.

அவன் கையில் மது கோப்பை இருந்தது. அதை அவன் ஒரு தடவை சுவைத்துவிட்டு மீண்டும் சிரித்தான்.

நான் சிலேபோல பலகணி வழியாக கடலேப் பார்த்துக் கொண்டிருந்தேன். அதுவும் பேரிரைச்சலோடு சிரித்தது.

'முனி!' அவன் அழைத்தான். நான் திரும்பினேன்.

"என்மீது கோபமா உன் பேச்சை கேட்கவிலலே என்று?"

"........"

"யாரும் என்றும் நல்லவஞக இருப்பதில்லே. இதை நீ தானே சொன்ஞய்."

"...அதஞல்"

"அதஞல் குடிக்கவில்லே. நான்-நான், குடிக்கிறேன் எனக்காக-என் மனேவிக்காக! அவன் மீண்டும் வெறிகொண்டவனேப் போலச் சிரித்தான். எனக்கோ திகைப்பும் வியப்புமாக இருந்தது.

மனேவிக்காக குடிக்கிருஞமே. ஒருக்கால் மனேவியால் குடிக்கிருஞே!

"நான் மீண்டும் கடலேப் பார்த்தேன். பெரிய சுரா மீன் ஒன்றை நான்கைந்து வலேஞர்கள் இழுத்து வந்தனர். சுற்றியிருந்த மக்கள் அதனருகில் வேடிக்கை பார்க்க ஓடினர்.

—இவன் உள்ளத்திலும் இது போல கொடிய "சுரா" இருக்குமா"

"நண்பா" முத்துவேலன் அழைத்தான். குரல் கரகரப்பாக இருந்தது. இனிமையான கீதம் பாடும் குரல் எங்கே? சாராயத்தில் கரைந்துபோயிற்று!

கடையில் கூட்டம் மிகுந்தது. கண்ணுடிக் குவளேகளின் விதவிதமான குரல்கள்-பேச்சுகள் - சிரிப்பு!

கொஞ்ச நேரத்திற்கு முன் ஒரு உலகம் இங்கு கூடும் என்றுதான் எண்ணினேன். அது தவறு. பல உலகம்—மிகப் பல உலகம் - ஒவ்வொரு மனிதனுமே ஒரு உலகமாக எனக்குத் தெரிந்தான்.

"நண்பா" முத்துவேலன் என்னே மீண்டும் அழைத்தான்.

நான் திரும்பினேன்.

"என்ன அங்கு பார்க்கிருய்?"

—10-ம் பக்கம்



"இந்தியாவில் ஜனநாயக முறையில் நிர்வாகம் நடத்தப்பட்டு வரும்போது பலமான எதிர்க்கட்சியொன்றை நிறுவனம செய்ய முடியாமல் போஞல் அது காங்கிரசின் குற்றமல்ல.

"காங்கிரசின் கொள்கைகள், திட்டங்கள் நீங்கலாக எதிர்க்கட்சிகள் வேறு குறிப்பான திட்டத்தையோ, கொள்கையையோ மக்களுக்குத் தரவில்லே. ஆகையால், தான் ஜனநாயக நாட்டில் ஒரு பலமான எதிர்க்கட்சி அமைக்க முடியவில்லே"

—ஸ்ரீமந் நாராயண்
காங்கிரஸ் பொதுக் காரியதரிசி, 18 11-56.

"கம்யூனிஸ்டுகள், சோஷலிஸ்டுகள், தமிழரசுக் கழகம்; தி. மு. கழகம் ஆகிய பல கட்சிகளுக்கும் ஒவ்வொரு மாதிரியான கொள்கைகளும் திட்டங்களும் இருக்கின்றன. இவை எல்லாவற்றிற்தும் நாட்டில் வேலே இருக்கின்றன—பிரச்சினேகள் இருக்கின்றன.

ஆஞல், காங்கிரசுக்கு எதிராக உள்ள இந்தக் கட்சிகளிடையே ஒன்றுபட்ட மனப்போக்கு இல்லாமல் இருக்கிறது. எதிர்க்கட்சிகள், ஒரு கையில் உள்ள ஐந்து விரல்களேப் போல்நுந்தால் பரவாயில்லே...ஒருவர் கரத்தில் மூன்று விரல்கள், மற்றவர் கரத்தில் இரண்டு விரல்கள் என்ற நிலேயில்தான் இருக்கின்றன, இதில், இரண்டு விரல்காரன் மூன்று விரல்காரனேக் கேலி செய்கிருன். மூன்று விரல்காரன் இரண்டு விரல்காரனைக் கேலி செய்கிருன்.—இப்படி எதிர்க்கட்சியிலிருக்கிற நாம் ஆளுக்கு ஆள் மற்றவரைப்பற்றியே பேசிக் கொண்டிருக்கிறோம்! காங்கிரஸ் வாழுகிறது; வாழ முடிகிறது.

—அறிஞர் அண்ணு.

காலமே! கன்னிப்பெண்ணே! 'கண'வேகக்காரியே!

கல்லறைதான் உனக்கெங்கே? கதையைச் சொல்லேன்

நொடியும் நில்லாது ஓடிக்கொண்டேயிருக்கும் காலமே! இளமை மாறாத குமரியே! அமரியே! ஆடிவந்து உள்ளம் தொட்டு ஓடிவிடுங் கள்ளியே! கவிஞர் காரிகையே! நீ ஏன் நில்லாமல் ஓடிக்கொண்டேயிருக்கிறாய்? யாரைத் தேடிக்கொண்டு ஓடுகிறாய்? யாருக்காக அஞ்சி ஓடுகிறாய்? நொடி பொறுத்தாலும், அதைப் பயன்படுத்திக்கொண்டு கொடியவர்கள் செய்யும் பழிகள், கோடி கோடியாகப் பெருத்துவிடுமென்றே நடுங்கியோடுகிறாய்? அல்லது, யாருடைய கனிவும், கடைக்கண் பார்வையும் உனக்கு வேண்டியதில்லை என்ற துணிவினாலோ ஓடிக்கொண்டிருக்கிறாய்? பேரும் புகழும் பெற்ற முடிமன்னரெல்லாம் உன் காலடியிலே அமிழ்ந்து, பொடி மண்ணாகிப் போய்விட்டாரென்ற ஆணவமோ? காலமே! நீ எதற்காகத்தான் நிற்க மறுக்கிறாய்! காற்றும், கதிரும் மனிதனுக்காகக் காத்திராமல் ஓடிக்கொண்டிருக்கின்றன. உன் சுழற்சியிலே உரு மாறிப் போகவேண்டிய அவைகள், உனக்காக அஞ்சித்தான் உன்னைப் போலவே நடந்துகொள்கின்றனவோ! சற்றே நின்று பதில் சொல்லாயோ!

காலமே! நானொரு கதை சொல்கிறேன், கேட்கிறாயா? எனக்குத் தெரியும் உன்னால் நின்று கேட்க முடியாதென்று! நான் உன்னோடு ஓடிக்கொண்டே சொல்கிறேன், கேட்பாயோ!

கடலோரம்! தந்தையின் கரம் பற்றியவாறு நடந்துகொண்டிருந்ததாம் ஒரு பிள்ளைக் கனியமுது. ஆழ்ந்து அகன்ற நீலக்கடல், அந்தக் குழந்தையின் உள்ளத்திலே ஒரு சந்தேகத்தைக் கிளப்பிவிட்டதாம். உடனே, கடலைக்காட்டி, அதைத் தோண்டியவன் யாரெனத் தந்தையைக் கேட்டதாம். பெற்றெடுத்த அந்தப் பேரறிவாளியோ கடவுள் தோண்டினாரென்று கூறினானும். ஆனால் அந்தக் குழந்தை, அதோடு அமைந்துவிடவில்லை. அந்தக் கடவுள் எங்கேயிருக்கிறாரென்று கேட்டதாம். வானத்தைப் பார்த்தே பழக்கப்பட்டுவிட்ட அந்தத் தந்தை, நீலவிசும்பைக் காட்டி, அங்கேயிருக்கிறாரென்று சொன்னானும். இளவிரலால் அந்த அகன்ற வெளியைச் சுட்டிக்காட்டியபடியே, நம் வீடுபோல அவர் வீடு அங்கேயில்லை என்றுகேட்டதாம்குழந்தை. தந்தை மலைத்து நின்றானும்! குழந்தை துளைத்துக்கொண்டே இருந்ததாம்!

பறந்துகொண்டிருக்கும் காலப் பாவையே! உனக்கு ஏன் இந்தக் கதையைச் சொன்னேன் தெரியுமா? நீயும் எனக்கு அந்தக் குழந்தை கேட்ட கேள்வியாகவே உள்ளாய். உன்னை என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. குழந்தை கேட்ட சிக்கலான கேள்வியின்முன் மலைத்து நின்ற தந்தையைப் போலவே நானும் உள்ளேன். நீ எங்கே பிறந்தாய்? எங்கே போய் நிற்பாய்? உன் எல்லைக்கல் எப்படி இருக்கும்? பலமுறை எண்ணியெண்ணிப் பார்த்துவிட்டேன். என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை.

உலக வரலாற்றைக் கணிக்க வரும் ஒவ்வொரு அறிஞனும் தனக்கு ஒரு துவக்கம் தேவை என்று விரும்புகிறான். அப்படி விரும்புபவன், "மனிதப்புல் இந்த மண்ணிலே தோன்றாத முன்னேயே" என்ற தொடரைத்தான் தனக்குத் துவக்க இடமாக வைத்துக்கொண்டு எழுதமுடிகிறது. அதற்குமேல் அவனால் செல்ல முடிவதில்லை. ஆனால், காலமே! நீ அதற்கு முன்பிருந்துங்கூடத்தானே ஓடிக்கொண்டிருக்க வேண்டும்! அப்படியானால் நீ எப்போது பிறந்தாய்? இதை என்னால் தெரிந்துகொள்ள முடியவில்லை.

மேலும் ஒன்று! எங்கள் விரிந்த மனப்பான்மை படைத்த தமிழகத்திலே புலவனொருவன் வேந்தனை வாழ்த்தும்போது,

"அங்கண் விசும்பில்
ஆரிருள் அகற்றும்
வெங்கதிர்ச் செல்வன்
போலவும் குடதிசைத்
தண்கதிர் மதியம் போலவும்
நின்று நிலைஇய
ருலகமொடுடனே!"

என்று வாழ்த்துகிறான். எவ்வளவு பெரு எண்ணம் அவனுக்கு! ஆனால், அந்த வெங்கதிர்ச் செல்வனும், தண்கதிர் மதியமுங்கூட, உன் போக்கிலே உருண்டு உருக்குலையப் போகின்றவைதானே! ஆர் கடலும், கார்மேகமும், மண்ணும், மலையும், விண்ணும் எல்லாமுமே ஒருநாளைக்கு நிலைமாறி அழியப் போகின்றவைதானே! ஆனால், காலமே! அதற்குப் பின்னாலும் நீ ஓடிக்கொண்டேதானே இருக்கப் போகின்றாய்? அப்படியானால் உனக்குச் சவக்குழி எங்கேதான் அமைந்திருக்கிறது? இதையும் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை!

காலமே! உன் போக்கிலே எவ்வளவு வியப்பான மாறுதல்கள் எல்லாம் நடக்கின்றன! நீ எவ்வளவு வேடிக்கைகளைச் செய்துகொண்டு ஓடுகிறாய்! யாரும் செய்ய முடியாத பெருஞ் செயல்களையெல்லாம் செய்துமுடித்துவிடுகிறாய்! ஆனால் உன்னை யாருமே "பெரியோய்!" எனப் போற்றுவதில்லை. மாறாக "காலம் என்பது உயிரென்னும் மரத்தை அறுக்கும் வாள்" என்றல்லவா காய்ந்து விழுகின்றனர், இந்த உயிராசை பிடித்த மனிதர்கள்!

எலியும் பூனையுமான தலைவர்களை இணைக்கிறாய்! துருவ மனப்போக்கு கொண்ட நாடுகளைத் தோழமை கொள்ளச் செய்கிறாய்! இணையமுடியாத இரண்டு தனித் தனி நேர்க்கோடுகள் போன்ற சமுதாயங்களை, உறவுகொள்ளச் செய்கிறாய்! உன் போக்கிலே பள்ளம் மேடாகிறது! காடு நாடாகிறது! பாலை சோலையாகிறது! நீ செய்யாதது எதுவென்றே தெரியவில்லை. ஒட்டியவயிற்றினராய், கட்டக்கந்தையுமின்றி, அன்றாட வாழ்வுக்கே மன்றாடிக்கொண்டிருப்போரை, அரசாள வல்லவராக மாற்றிவிடுகின்றாய்! ஆணவக் கூத்தடிப்போரை அடங்கிக்கிடப்போராக மாற்றிவிடுகிறாய்! நீ செய்யும் நல்ல பணிகட்காகச் செம்மை மனங்கொண்டோர் நன்றி செலுத்திக்கொண்டுதான் உள்ளனர். காலமே! எனக்கு மட்டும் சொல்லிவிடு. நான் யாருக்கும் சொல்ல மாட்டேன்! நீ ஏன் இப்படி ஓடிக்கொண்டே இருக்கிறாய்?

காலமே! உன்னையொன்று கேட்கிறேன். நீ எத்தனையோ நாட்டினரைப் பார்த்துக்கொண்டு வருகிறாயே, இந்தத் தமிழ்நாட்டாரைப் போல எங்காவது பார்த்திருக்கிறாயா? ஒரு நேரத்தில் "நீளப் புகழ் பரப்பி, நெடுமரத்தில் கொடி கட்டி, நிகரில்லை என" நிமிர்ந்த வாழ்வு வாழ்ந்தார்களாம் இவர்கள்! இவர்கள் வீரத்தின்முன் வடவன் வாடினானும்! குடவன் கூம்பினானும்! கடாரம் பணிந்ததாம்! ஈழம் குனிந்ததாம்!

"வானிடை மிதந்திடும்
தென்றலிலே-மணி
மாடங்கள் கூடங்கள் மீதினிலே
தேனிடை ஊறிய
செம்பவழ-இதழ்ச்
சேயிழை யாருடன் ஆடுவமே!"

என்று பள்ளுப்பாடி பகட்டான வாழ்வு வாழ்ந்தனராம். ஆனால், இன்று இவர்களின் நிலையைப் பார்த்தாயா? கூட்டுபவனிடம் கூடி, கொட்டுபவனிடம் குனிந்து, ஆட்டுபவனிடம் ஆடி, அடக்குபவனிடம் அடங்கி, சொந்த வலிமை இழந்து, நொந்த உள்ளத்தினராய் உயிரற்ற வாழ்வல்லவோ வாழ்கின்றனர். காலமே! நீ ஏன் இவ்வளவு கொடுமையான மாற்றங்களுக்கெல்லாம் வழிகோலுகிறாய்? ஏமாந்தால், சாம்பிக் கூம்பிச் சாகத்தான் வேண்டும் என்பதை, அன்னைத் தமிழகத்தின்மூலம் அவனிக்கு அறிவிக்க ஆவலுற்றாயோ!

காலமே! நீயோட்டும் தேர்த் தட்டின்மீது நின்றவாறு, பார் காட்டும் பாங்கான எழிலிலே திளைத்து மகிழ்ந்த கலையுள்ளங்கள் எத்தனை யெத்தனை! மதுவும், மங்கையும், மகிழ்ச்சிதரும் காவியங்களுமே நிலையானவை என்று நம்பி, சுவைத்து, மடிந்தான், பாரசீகக் கவிஞன் உமர்கையாம்! தூணில் அழகிய புத்தம் புதுவீடு - அதன் பக்கத்திலே பத்துப் பதினைந்து தென்னைமரங்கள்-அந்தத் தென்னைகளின் கீற்றுக்கிடையே முத்துச் சுடர் நிலவு-கத்துங் குயிலோசை - துணையாக ஒரு பத்தினிப்பெண்: இப்படிக் கலைவாழ்வைக் கனவு கண்டு, அதிலேயே ஊறி இன்புற்றிருந்த பாரதி! இவர் போன்று இன்னும்பலர்! இருண்ட உலகுக்கு அறிவு வெளிச்சம் தந்த ஒளி விளக்குகள் எத்தனைபேர்! உலகத்தின் துன்பங்களைக் கண்டு உள்ளம் வெதும்பி, அவைகளுக்கொரு முடிவு கண்டு, உலகை இன்பக் கோட்டமாக்கும் வழி எது யெதுவென ஓயாமல் சிந்தித்து, அந்தச் சிந்தனையையே தங்கள் வாழ்வாக்கிக்கொண்டிருந்த மனிதகுல மேதைகள் எத்தனைபேர்! இவர்கள் எல்லாம் இன்று எங்கே? கால வெள்ளமே! கயவனையும், கசடனையும், கருத்துக் குருடர்களையும் கழுவிக்கொண்டு போவதுபோல, நீ இவர்களையுமா இழுத்துக்கொண்டு போய்விட வேண்டும்! நன்றியுள்ள மனித சமுதாயத்தின் கடைசி நிழல் இந்த உலகத்தில் அசைந்துகொண்டிருக்கும் வரை, அந்தப் பேருள்ளங்களின் நினைவு அகலவே அகலாது. காலமே! இதை நீ உணரத்தான் வேண்டும்!

காலமே! இந்த மனித சமுதாயத்துக்கு ஏன் கொஞ்சமும் தெளிவிருக்கமாட்டேனென்கிறது?

போன நாட்கள் மீண்டும் போகின்றனவா? ஆனாலும் "அந்த நாளும் வந்திடாதோ" எனப் புலம்பிக்கொண்டே [...]கின்றனர் இந்த மனிதர்கள். [...] காலமும் இறந்த காலமும் [...] இடத்தில் எப்படி ஒன்றி[...] முடியும்?

"கல்லறையின்மீது நான், [...]ரோரின் துன்பத்தை எழு[...]விலே சந்திக்கும்போது, [...] இதயம் இரக்கத்தினால் உ[...]கிறது. அந்தப் பெற்றோ[...] கல்லறையையே காண நேரி[...] போது, நாம் யாரைச் சிக்கி[...] தொடர்ந்து தீரவேண்டுமோ, அ[...]களுக்காகக் கலங்குவதிலே உ[...] பயனற்ற தன்மையை என்[...]கிறேன்." எனக் கூறுகி[...] அடிசன் என்ற எழுத்து[...] அறிஞன். "ஆண்டாண்டுதோ[...] அழுது புரண்டாலும் மாண்[...] வருவரோ மானிலத்தீர்?" - [...] இங்கே பிறந்த கேள்வி! எல்[...]ருக்கும் இந்த உண்மை தெரி[...] ஆனாலும் ஒருவர் இறந்தால் அ[...]காகக் கண்ணீர் விடாமல் இ[...] முடியவில்லை! காலமே! இ[...] என்னதான் காரணம்! உனக்[...] தெரியுமா?

சுழன்றோடிக்கொண்டிருக்[...] காலச்சக்கரமே! எனக்கு [...] சந்தேகம்! அறிஞனை கே[...] உனக்கு யார் செல்லப்பிள்[...] என்று கேட்டால், சிந்தனை [...]பான். கவிஞனைக் கேட்[...] காவியம் என் செல்லப் பிள்[...] என்பான். கலைஞனைக் கேட்[...] அழகைக் காட்டுவான், துறவி[...] கேட்டால் நிச்சயம், தனிமை[...] என் செல்லப்பிள்ளை என்பா[...] ஆனால், காலமே! உனக்கு [...] செல்லப்பிள்ளை? எது செல்[...] பிள்ளை?' சொல்லமாட்டா[...] பாவம்! இருந்தால் அல்லவே [...] சொல்வதற்கு! உனக்கு யாரு[...] இல்லைபோலும்! நீதான் எல்லோ[...]ரையும், எதிர்ப்படும் அனைத்தை[...] விழுங்கியபடியே போய்க்கொ[...]டிருக்கிறாயே, உனக்கு எப்[...] இருக்கமுடியும் செல்லப்பிள்ளை[...] ஒருவேளை, உன் முடிவுதா[...] உனக்குச் செல்லப்பிள்ளையோ[...] அதைத் தேடிக்கொண்டுதான் [...] இப்படி ஓடுகின்றாயோ! அதை[...] நீ சொல்லித்தானே நான் தெரி[...] கொள்ளமுடியும்!

காலமே! நீ வருகிறாய்! மெ[...] நகர்கிறாய்.....போகிறாய்.....போ[...] கொண்டே இருந்துவிடுகிறா[...] காற்றைப்போல் வருகிறா[...] கனவைப்போல் போய்விடுகிறா[...] எங்கேதான் போகிறாய்? எங்கா[...] போய்த்தொலை! உன்னோடு பே[...] கொண்டிருந்தால் என் கால[...] வீணாகிறது! நான் போகவேண்டு[...]

"அன்பாளன்[...]

> "போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும் ; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றல்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் ; அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 3 || 24—11—56 || இதழ் 13

நினைவிருக்கட்டும் காமராசரே!

அரசியலில் முன்னணியிலிருப்ப வர்களில் நாக்கைத் தன் வசப் படுத்திக்கொள்வோரு முண்டு; நாக்கிற்கு அடிமைப்பட்டுவிடுவோரு முண்டு. இதில், பின்னவர்களின் பட்டியலில் காமராசர் இடம்பிடித் திக்கொண்டிருப்பது வியப்புக்குரிய தாகாது! தேர்தல் நேரத்தில் தேடிப்போய்ப் புகழ்வது அரசியல் நளினமென்று கருதப்பட்டாலும் காமராசர் பாணி, அவர் கையாளும் பிரச்சார முறை அவரை எங்கோ, யார் கூட்டத்திலோ கொண்டுபோய்ச் சேர்த்துவிடுகின்றது.

இரண்டு மாதங்களுக்கு முன் திருப்பூரில் தமிழ்நாடு காங்கிரசின் முக்கியஸ்தர்கள் கூட்டம் ஒன்று நடந்தது. அதில் காமராசர் கலந்து கொண்டார். அந்த நேரத்தில் ஆச்சாரியார். காமராசரைச் சாடும் விதத்தில் வெளியிட்ட அறிக்கையைப் பார்த்த காமராசர், ஆச்சாரியாரை மிக மோசமாக விமர்சனம் செய்திருந்தார்.

"பெரியார் அளவுக்கு ராஜாஜி கீழ்த்தரமாகப் போய்விட்டார்" என்று துணிந்து சொன்னார் காமராசர். காமராசருடைய அரசியல் வரலாற்றில் ஆச்சாரியாரை இவ்வளவு கீழ்த்தரமாக - பகிரங்கமாக அவர்சொன்னதில்லை. ஒரே வார்த்தையில் இரண்டு முது கிழவர்களையும் காமராசர் கேவலமாகப் பேசியிருந்தார்.

'ஐயகோ பெரியாரே, உதைத்த காலை முத்தமிடலாமா? பச்சைத் தமிழர் என்று புகழ்கிறீரே. காமராசரை! அவர் உங்களை மிக மிக மோசமாகத் திட்டுகிறாரே" என்று நாமெல்லாம் மெத்த விசனப் பட்டோம்.

திருப்பூர் நிகழ்ச்சி நடந்து இன்னும் சரியாக இரு மாதங்கள் முடியவில்லை. ஆனால் அதற்குள் காமராசர், அவர் யார் யாரைக் கீழ்த்தரமென்றாரோ அவர்களைக் காட்டிலும் கீழ்த்தரமாகப் போய் விட்டார்.

'தி. மு. கழகம் அதிகாரத்திற்கு வந்தால் ஆபத்து எனத் தெரிந்து ஈ. வெ. ராமசாமி நாயக்கர் காங்கிரசை ஆதரிக்கிறார்.....கூடஇருந்து குடிகெடுப்பவர்கள் என அறிந்து தான் இவர்களை வெறுத்தார்."

வசைமாலை சூட்டிய காமராசர், பாடிய புகழ்மாலை இது.

திருப்பூரிலே கீழ்த்தரமாகத் தெரிந்த பெரியார், வேலூர் காங்கிரஸ் பொதுக்கூட்டத்திலே ஜோதி விளக்காகத் தெரிகிறார் காமராசர் கண்களுக்கு! காமராசர், பெரியாரைத் திட்ட, அதைப் பார்த்து நாம் மகிழவேண்டும்; பூரிக்கவேண்டும் என்ற எண்ணமில்லை நமக்கு! ஒருபோதும் நம் நெஞ்சு, எதிரிக்கு எதிரியை நண்பனாக்க் கொள்ளாது! பிரதமர் காமராசரின் மனப்போக்கைத்தான் குறிப்பிடுகிறோம்-நாம்!

குரங்குப் புத்தியை நம்பலாம்; அசட்டுத்தனத்தைக்கூட ஓரளவு நம்பலாம்; இரட்டைப்படகில் கால் வைப்போர் எப்போதுமே ஆபத்தானவர்கள் என்பர் அறிஞர் பெருமக்கள். இந்த அறிவுரை தேசியத் திராவிடரின் கண்களுக்குப் பட்டிராவிட்டாலும் பரவாயில்லை. இப்போதாவது புரியட்டும்!

ஒருவரைப் புகழ்வதும் . இகழ்வதும், குறிப்பிட்ட ஒரு அரசியல் பிரச்சினை ஆடி ஓயும் காலம் வரையாக இருந்தால் அதைத்தான் ராஜதந்திரம் என்று சொல்லுவார்கள்.

ஆனால் காமராசர் பெரியாரைத் தூற்றியதற்கும் போற்றியதற்கும் இடையிலே எந்த ஒரு சிக்கலும் தமிழகத்தில் முளைத்து விடவில்லை. ஆனாலும் காமராசர், நேற்று இகழ்ந்தவரை இன்று புகழ்கிறார்.

புதுச்சேரியில் பேசிவிட்டு நேரடியாக வேலூர் வந்த பண்டித நேரு- அங்கே பேசினார்-நாட்டைப் பிரிக்கச் சொல்வோரை ராணுவத்தை விட்டு கைவரிசை காட்டச் சொல்கிறேன் என்று. புதுச்சேரியிலிருந்தல்லவா வந்திருக்கிறார்; ஆகவே பண்டிதர் அப்படித்தான் பேசுவார் என்றிருந்தோம். அதே வேலூரில் அதே மேடையில் காமராசரும் மிரட்டிப் பார்க்கிறார்!

காமராசரே! உங்கள் பாதையைப் பார்த்துப் போங்கள்! எங்களைக் கவனித்துக் கொண்டு போவதினால் உங்கள் காலில் முள் தைக்கலாம்! அதுவும் வேலூரிலே நீங்கள் மிகவும் கவலையோடு நடை போட வேண்டும். ஏனென்றால், காங்கிரஸ் அங்கே அழுகிப்போன சரக்கு!

அதனால்தான் காந்தியார்சிலையை திறந்து வைக்க அண்ணா அவர்கள் அழைக்கப்பட்டபோதுகூட,- காந்தியார் சிலையைத் திறந்துவைக்க நான் அழைக்கப்பட்டிருக்கிறேன். எனக்கு யோக்யதை உண்டா என்று சிலர் கேட்கிறார்கள். படித்துப்பட்டம் பெற்று எந்த வேலைக்கும் போக நினைக்காமல், வந்த வேலைகளையும் உதறித்தள்ளிய என்னுடைய தூய கரங்களால் காந்தியார் சிலையைத் திறந்து வைப்பதிலே என்ன தவறு?-என்று இடித்துரைத்தார்கள். காமராசர் இதை மறந்துவிடக் கூடாது. காந்தியார் சிலையைத் திறந்து வைப்பதற்குத் தமிழ் நாட்டிலே தகுதியுள்ள தலைவர் அறிஞர் அண்ணாதான் என்று முடிவுகட்டிய வேலூரிலே, அதே அண்ணாவைத் தலைவராகக் கொண்டுள்ள கட்சி, குடிகெடுக்கும் கட்சி என்று கூறியிருப்பது காமராசரின் 'மேதா விலாச'த்திற்கு ஒரு சான்றாக அமைகிறது.

காமராசரே! நீங்கள் பேசிய இடமோ வேலூர் - சுதேச மன்னர்கள் பலரை சுருண்டுபோகச் செய்த சரித்திரப் பிரசித்திபெற்ற மண் - ஆணவம் பேசியோரும், அடக்குமுறை செய்தோரும் 'சரணம்' போட்ட திருநகரம்! எச்சரிக்கிறோம் காமராசரே! காங்கிரசின் அறைகூவல் வேலூருக்கு சர்வசாதாரணம்! தூசு!

வாக்காளர் ஆகிவிட்டீர்களா ?

'நீங்கள் வாக்காளர் ஆகிவிட்டீர்களா? வாக்காளர் ஆகாவிட்டால் உடனே வாக்காளராகப் பதிவு செய்துகொள்ளுங்கள்,' என்று முன்பு நம்நாடு இதழில் பலமுறை வெளிவந்த செய்தி, தோழர்களுக்கு நினைவிருக்கலாம்.

வாக்காளர் ஆவது எப்படி? வாக்காளர் பட்டியலில் தன் பெயர் பதிவாகாதிருந்தால் மேற்கொண்டு செய்யவேண்டியது என்ன?-இதுபோன்ற ஐயப்பாட்டிற்குச் சரியான விளக்கம் இல்லாததினால் 21 வயது நிரம்பிய அனேக தோழர்கள் தங்கள் பெயரை வாக்காளர் பட்டியலில் இன்னமும் பதிவு செய்யாமல் இருப்பதாக நம் கவனத்திற்கு வருகிறது. வாக்காளர் ஆவதற்கு அரசாங்கம் விதித்திருந்த காலம் முடிவடைந்துவிட்டது. இனிவாக்காளராக மேற்கொண்டு என்ன நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமென்பதற்குக் கீழ்க்கண்ட விளக்கம் தரப்படுகிறது :-

உங்கள் கிராமம், அல்லது நகரத் தொகுதியின் வாக்காளர் பட்டியலில், 21 வயதிற்கு மேற்புட்டவர்களது பெயர் பதிவு செய்யாமல் விடுபட்டிருந்தால் உடனடியாக அந்தக் கிராமம், அல்லது நகரத்திலுள்ள தாலூகா ஆபீசுக்குச் சென்று, வாக்காளராகப் பதிவு செய்துகொள்வதற்கு வேண்டிய பாரம் (நமூனா-iv) பெற்றுக்கொள்ளுங்கள். இது இலவசமாக வினியோகிக்கப்படுவதாகும்.

மேற்படி பாரத்தைப் பூர்த்தி செய்துகொண்டு அத்துடன் ரூ. 1-க்கு முத்திரைப் பத்திரம் **(Non-Judicial Stamp Paper)** *வாங்கி அதில் குடியிருப்பு சம்பந்தமாய்! வாக்காளர் பட்டியலில் தன் பெயர் பதிவுபெற விட்டுப்போனதாகத் தெரியவருவதால் தன்னைப் பதிவு செய்துகொள்ளவேண்டும் என்பதாகத் தாசில்தார் அவர்களுக்கு மனு எழுதி, முன்பு பூர்த்திசெய்திருக்கும் நமூனா-iv யும் ஒன்றாகச் சேர்த்து தபாலிலோ, நேரிலோ தாசில்தாரிடம் சேர்த்துவிடவும். பின்னர் விசாரணை செய்து வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயரைச் சேர்த்துக்கொள்வதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் அவர்களே (தாசில்தார்) கவனித்துக் கொள்வார்கள்.*

நீங்கள் மனுச் செய்த 15 தினத்திற்குள் எவ்விதத் தகவலும் இல்லையானால், மீண்டும் தாசில்தார் அவர்களுக்கு இதுபற்றி சாதாரணத் தபால்மூலம் நினைவுபடுத்தலாம். தேர்தல் தேதி அறிவிப்புவரை மேற்கண்ட விதத்தில் வாக்காளராகப் பதிவு செய்துகொள்ள வாய்ப்பிருக்கிறது.

"நம் நாடு"

மாணவர்களே !

1957 S. S. L. C.

இந்தத் தேர்வில் நிச்சயமாக வெற்றியடைய உற்ற துணை நூல் ஒன்றே ஒன்றுதான் !

இரட்டையர் தமிழ் வினு விடை

விலை மிகக் குறைவு. ரூ. 1-4-0 தான்.

இதுவரை ஒன்றுமே படிக்காதிருந்தாலும் இந்தத் துணை நூலின் உதவியால் சில மணி நேரத்திலேயே உங்கள் முழு வெற்றியையும் நிச்சயித்துக் கொள்ளமுடியும். உங்கள் தேவைக்கு முந்துங்கள் !

எல்லா முக்கிய வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

விபரங்கட்கு :

செல்வி பதிப்பகம், காரைக்குடி.

★ விலை போகாத வைரம் ★

பிரிட்டிஷ் மன்னர் கிரீடத்திலும் பிற சின்னங்களிலும் பதிந்து இன்றும் ஜொலித்துக்கொண்டிருக்கும் குல்லினுன் சல்லின் ஆச்சரியமான வரலாறு இது.

ஃப்ரெடரிக் வெல்ஸ் தென்னுப்பிரிக்காவிலுள்ள ப்ரிடோரியோ நகரத்துக்கு அருகில் ப்ரீமியர் வைரச் சுரங்கத்தின் மேல் பகுதியைக் கவனிக்கும் மானேஜர். அவர் ஒருநாள் சாயங்காலம் வேலை முடித்து கடைசித்தடவையாக ஒருதரம் சுற்றிப் பார்த்துவிட்டு வரச் சுரங்கத்துக்குள் போயிருந்தார்...

அஸ்தமன சூரியனின் ஒளிபட்டுத் திடீரெனத் தலைக்கு மேல் ஓரிடத்தில் ஏதோ ஒரு வஸ்து மிகவும் பளபளப்பாகத் தெரிந்தது. 30 அடி ஆழம் வெட்டிய ஒரு பள்ளத்தின் மேல்பாகத்தில் அது இருந்தது. சாரத்தைப் பிடித்துக் கொண்டு ஏறினர் வெல்ஸ். ஜேபியிலிருந்து பேனுக்கத்தியை எடுத்துக் களிமண்ணிலிருந்து அந்தக் கல்லை நீக்கினர்

இது நடந்தது 1905 ஜனவரி 26-ஆம் தேதியில். உலகத்திலேயே பிரம்மாண்டமானவைரம் கிடைத்துவிட்டது! 4 அங்குல நீளமும் இரண்டரை அங்குல அகலமும் கொண்டது. அதன் தரமே அலாதி; அதன் தூயநீலங் கலந்த வெள்ளை நிறம் பார்க்கப் பார்க்க மிகவும் கவர்ச்சியாக இருக்கும்.

செதுக்குவதற்கு முன் மூன்று பட்டை இயற்கையாகவே அமைந்து பெரும் பாகம் வெட்டுப் பட்டு இருந்ததால், அது எட்டுப் பட்டை கொண்ட பெரிய வைரத்தின் ஒரு பகுதி என்று தெரிந்தது. மீதிப் பாகம் எங்கே சிக்கிக் கிடக்கிறதோ, எப்போது திடீரென்று கிடைத்து உலகத்தையே பிரமிக்க வைக்கப் போகிறதோ தெரியவில்லை.

இந்தச் சுரங்கத்தைக் கண்டுபிடித்த ஸர் தாமஸ்குல்லினன் என்பவருடைய பெயரை இந்த வைரத்துக்கு வைத்தார்கள். வெல்ஸுக்கு 2000 பவுன் போனஸ் கிடைத்தது.

உடனே சுரங்கப்பங்கு மதிப்பு ஏறிவிட்டது. ஆனல் கம்பெனி டைரக்டர்கள் முகந் தொங்கிக் கிடந்தார்கள். அவ்வளவு பெரிய வைரத்தை அவர்கள் நிர்ணயித்த விலை கொடுத்து வாங்க யாரும் முன் வருவார்களென்று தோன்றவில்லை.

அதை லண்டனில் விலை கோரக் கொண்டு போவது என்றுதீர்மானித்தார்கள். ஆனல் எப்படி அதை அனுப்புவது என்பதுதான் பெரும் பிரச்சினையாக இருந்தது. கடைசியில் ஒப்புக்கு ஒரு மதிப்புக் குறித்து, தபால் பார்சலில் அதை அனுப்பிவைத்தார்கள். அதோடு ஒரு சாதாரணக் 'கல்'லையும் சேர்த்து, இரண்டையும் நன்ருக மூடி, சீல் வைத்தார்கள்; கப்பலின் காப்டனுடைய அறையில் ஒரு பெட்டியில் வைத்தார்கள். துப்பறியும் நிபுணர்கள் அந்த இரண்டும் பிரிட்டன் போய்ச் சேரும்வரை வெகு ஜாக்கிரதையாகக் கண்காணித்து வந்தார்கள்.

அந்த வைரத்தைப் பார்த்தவர்களில் ஏழாம் எட்வர்டு சக்கரவர்த்தியும் ஒருவர். இரண்டு ஆண்டுகள் அதை வேடிக்கை பார்க்கக் கும்பல் திரண்டு வந்தபடி இருந்தது. ஆனல் யாரும் அவ்வளவு விலை கொடுத்து அதை வாங்கத் தயாராயில்லை.

கடைசியில் தென்னுப்பிரிக்காவைச் சேர்ந்த வள்ளல் ஒருவர் சில ஆண்டுகளுக்கு முன்னுலேதான் பிரிட்டனை எதிர்த்துப் போரிட்ட தீர போயர் தலைவரான ஜெனரல் லூயிஸ் போதா என்பவர் முயற்சியினுல் அதற்கு நல்ல யோகம் அடித்தது. பிரிட்டிஷாருக்கும் போயர்களுக்கும் சமாதானம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்களில் போதாவும் ஒருவர்.

1906-டிசம்பர் 6-ஆம் தேதி பிரிட்டிஷ் சர்க்கார் தென்னுப்பிரிக்காவிலுள்ள டிரான்ஸ்வாலுக்குச் சுதந்தரம் அளித்தது. அதன்மேல் நடந்த தேர்தலில் போதாவின் கட்சி பெரும்பான்மையான வோட்டுப் பெற்று வெற்றி அடைந்தது. போதா, தாம் பிரதம மந்திரியானதும் நாடு சுதந்தரம் பெற்றதன் அறிகுறியாகவும் நன்றியாகவும் 7-ம் எட்வர்டு மன்னருக்கு அந்தக் குல்லினன் வைரத்தைக் காணிக்கையாக அளிக்கத் தீர்மானித்தார்.

எட்வர்டு மன்னரின் 66-ஆம் பிறந்த தினத்தன்று சண்ட்ரிங்ஹாமில் மன்னர் மாளிகைக்கு அதை அனுப்பி, அதனுடன் 'டிரான்ஸ்வால் மக்களின் ராஜ விசுவாசம், அன்பு இவைகளின் அறிகுறியாக இதைப் பெற்றுக் கொள்ள வேண்டுகிறேன்' என்று ஒரு கடிதத்தில் விண்ணப்பித்துக் கொண்டார் போதா.

ஆனலும், இன்னும் சிக்கல் தீர்ந்தபாடில்லை. அவ்வளவு பெரிய வைரக் கல்லை முழுசாக எப்படி வைத்துக் கட்டுவது? அதைப் பிளந்துதான் நகையாக்கக் கட்ட முடியும்: இதுதான் கஷ்டமான காரியம். ஒவ்வொரு வைரத்துக்கும் மரத்தில் இருப்பது போல் பிளப்பதற்கு வாட்டமானபடி அமைப்புப் பொருந்தியிருக்கும். ஆனல் இதைச் சரியானபடி முன்னதாகத் தீர்மானிக்காமல் பிளக்கப் பார்த்தால் ஒரே அடியில் மதிப்பரிய பிரமாத வைரக் கல் பொடிப் பொடியாகப் போய்விடும்.

இந்தச் சிரமமான காரியத்தை மன்னர் ஆம்ஸ்டர்டாமிலுள்ள ஆஷர் கம்பெனியாரிடம் ஒப்பித்தார். கை தேர்ந்த வைரக் கல் நிபுணரான ஆஷர், பல வாரங்கள் அந்த வைரத்தை நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்தார். எப்படியெல்லாம் பிளந்தால் வாட்டமாக வரும் என்று பெரிய உளி முதலிய கருவிகளை வைத்துக் கொண்டு கண்ணுடியிலும் மெழுகிலும் செதுக்கிப் பார்த்தார். பல நாள் ஓய்வு எடுத்துக்கொண்டார். கடைசியில் ஒருநாள் அந்த வைரத்தை அதற்கென்றே தயாரித்த 'ஹோல்டா' ஒன்றில்வைத்துத் தம் சிற்றுளியை எடுத்து, எற்கனவே தாம் கால் அங்குல அளவுக்கு V என்பது போல் வைத்தார். அவருடைய சிப்பந்திகள் மூச்சு விடாமல், என்ன நேருமோ என்று கவனித்துக் கொண்டிருந்தார்கள். கனமான கொட்டாப்புளியால் உளியை ஒரு தட்டுத் தட்டினர் ஆஷா; உளி உடைத்துவிட்டது. அவருடைய முகமெல்லாம் ஜில்லென்று வேர்த்து வடித்தது. ஒரே நிசப்தம். ஆஷா இன்னும்ஓர்உளியை எடுத்து அந்தஇடத்தில் வைத்து மறுபடியும் தட்டினர். குல்லினன் வைரம் அவர் திட்டமிட்டபடியே இரண்டு பகுதிகளாகப் பிளந்து விழுந்தது. அதே சமயம் ஆஷரும் களைத்துப் போய்த் தரையில் குப்புறச் சாய்ந்தார்.

பின்னல், இரண்டாந்தரம் பிளந்ததில் அந்தக் கல் மொத்தம் மூன்று பெரும் பகுதிகளாயிற்று. இவைகளை ஒன்பது தனிக் கற்களாகவும் (இவைகளைக் குல்லினன் I, II...IX என்பார்கள்) 96 சின்னக் கற்களாகவும் வெட்டினர்கள். இந்த 105 கற்களையும் செதுக்கிப் பட்டை தீர்க்க 3 ஆட்கள் நாள் ஒன்றுக்கு 14 மணி நேரம் உழைத்தார்கள். இதைச் செய்து முடிக்க மொத்தம் 3மாத காலம் ஆயிற்று.

எட்வர்டு மன்னர் இவைகளில் நாலு வைரக் கற்களில் மிகப் பெரியதை 'நேஷனல் ரிகேலியா' என்ற கிரீடத்தில் பதித்து வைப்பதெனத் தீர்மானித்தார்; டிரான்ஸ்வால் மக்கள் தமக்கு அதை அளித்ததைப் பாராட்ட 'ஸ்டார் அவ்ஆப்ரிக்கா' என்று அதற்குப் பெயர் வைத்தார். மற்ற மூன்று சின்ன வைரக் கற்களுக்கும்'லெஸ்ஸர்ஸ்டார்ஸ் அவ் ஆபிரிக்கா' என்று பெயர் வைத்தார்.

மீதி 5 முதல் 9 வரை உள்ள குல்லினன் கற்களையும் அவற்றுடன் வெட்டியெடுத்த பெரும்பாலான சின்னக் கற்களையும் பதித்து, கண்ணறைபோல் அமைந்த வைர அட்டிகை ஒன்றைச் செய்து தம் ராணியான அலெக்ஸாண்ட்ராவுக்குப் போட்டார். அவளுக்குப் பிறகு அது அவளுடைய மருமகளான (காலஞ்சென்ற) மேரி ராணிக்கு உரியதாயிற்று. 'கிரேட் ஸ்டார் அவ் ஆப்ரிக்கா' என்ற வைரமும் மற்ற மூன்று சின்ன வைரக் கற்களும் இப்போது ராஜரீகத்தைக் குறிக்கும் மூன்று அம்சங்களான சிலுவை அமைந்த செங்கோல், இம்பீரியல் ஸ்டேட் கிரௌன் என்ற ராஜ கிரீடம், மேரி ராணியின் கிரீடம் இவைகளை அலங்கரிக்கின்றன. மேரி ராணியின் கிரீடம் இதுவரையில் பட்ட மகிஷிகளுக்காக அமைத்த கிரீடங்களுக்குள்ளேயே மிகவும் அழகும் கவர்ச்சியும் வாய்ந்தது.

உலகத்திலேயே தனிப் பெருமை வாய்ந்த குல்லினன் 'பிரிட்டிஷ் கிரீடத்துக்கே மிகச சிறந்த அணியாகத் திகழ்கிறது' என்ருல் மிகை ஆகாது. ★

குமரன் லாரி புக்கிங் ஆபீஸ்

மேலராஜ வீதி :: புதுக்கோட்டை

★

எங்கள் ஆபீஸ் மூலமாக எல்லா ஊர்கட்கும்—நாணயமாகவும், நம்பிக்கையோடும் குறிப்பிட்ட காலத்தில் கிடைக்கும்படி செய்கிருேம். ஒருதடவை எங்களுடன் தொடர்பு கொண்டவர்கள் எங்களை விடவே மாட்டார்கள் என்பது உறுதி. கடிதம் மூலம் வரும் ஆர்டர்களைக் கவனித்து உடனுக்குடன் ஆவன செய்வோம் என்று உறுதி கூறுகிருேம்.

மணத்திற்கும், மனத்திற்கும் தொடர்புண்டு

எங்கும் கிடைக்கும்.

8

சீதா நடிக்கும் 'சிதைந்த வாழ்வு'! ஒரு பெண்ணின் சோகக் கதை! உண்மையிலேயே நடந்தது! தேசானந்தர் மூக்கில் விரலை வைத்தார்! இது ஏன், அதே சீதாவாக இருக்கக் கூடாது!-அவருக்கு, நம்பிக்கை ஒளியுடன் கூடிய சந்தேகம் தோன்றிற்று. அவருக்கு, கொஞ்ச நாட்களாகவே, 'சீதா' என்ற பெயரைக் கேட்டதும் ரயிலில் கண்டெடுத்த பெட்டிதான் நினைவுக்கு வந்து கொண்டிருக்கிறது! சற்று அதிகமான சான்றுகளை, நாடக விளம்பரத்தில் கண்டதும் நம்பிக்கை வளர்ந்தது! அன்று இரவே சென்று நாடகம் பார்ப்பதென முடிவு கட்டினுர்.

குதிரை வண்டியை அழைத்தார். "ஓட்டலுக்குப் போக எவ்வளவு கேட்கிருய்!" என்று விசாரித்தார்.

"எந்த ஓட்டல் சாமி?"-இது அவன். அவர் ஒரு பெயரைச் சொன்னுர்.

"மூணு ரூபா குடுசாமி"

"மூணு ரூபாயா! அடேயப்பா! நல்ல ஆள்டா நீ! இந்தா இருக்கும் ஓட்டலுக்கு மூணு ரூபாயா! இவ்வளவு அநியாயமாக வாடகை கேட்டால் நாடு எப்படி உருப்படும் சொல்லு!"

"நாடு கெடக்குதுசாமி! ஏ வீடு உருப்படணுமே, அதைச் சொல்லு!"

"வீடு! வீடு! தனியொரு மனிதனும் தனது வீட்டைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தால், நாட்டுக்குச் சுதந்திரம் கிடைப்பது எப்படி!"

"ஆங்! சுதந்திரம் இல்லையின்னுதான் எங்க புள்ளை குட்டி அழுவுதாக்கும்! போசாமி! ஒரே வாடகை! ரெண்டரை ரூபா குடு! இல்லேன்னு வராது!"

"வேண்டாமப்பா! வேண்டாம்!" என்று கூறிய தேசானந்தர், மற்றும் சில வண்டிக்காரர்களை அழைத்தார். அங்கேயும் அதே கதைதான்!

"சிச்சீ! நாடு ரொம்பக் கெட்டுவிட்டது!" என்று தத்துவ முத்திரை வைத்த தேசானந்தர், நடந்தேசெல்ல ஆரம்பித்தார்.

ஓட்டலுக்கு வந்து சேர்ந்தபோது, அவர்கால்கள் 'விண் விண்' ணென்று தெறித்தன. "இதற்கு, கூடக் கொடுத்தாவது வண்டிவைத்து வந்திருக்கலாம்" என்று மெல்ல முணுமுணுத்தபடி, அறைக் கதவைத் திறந்து, கட்டிலில் சாய்ந்தார்.

ஓட்டல் பையன் அவருக்கு வந்த தந்தி ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்தான். அது மாசிலாமணிச் செட்டியாரிடமிருந்து வந்தது. 'மாணிக்கம் விஷயம் என்னஆயிற்று? பதில்!' என்று கண்டிருந்தது. என்ன பதில் கொடுப்பது? நாளைக்குத் தானே ஜாமீனுக்கு முயற்சிக்க வேண்டும்! முடிந்த பிறகு தந்தி கொடுக்கலாம் - என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டார் தேசானந்தர்.

மாலை ஆறு மணிக்கெல்லாம் நாடகம் பார்க்கப் புறப்பட்டார். இப்போது முன் எச்சரிக்கையாக ஒரு வாடகைக்காரே அமர்த்திக் கொண்டார். கொட்டகையில் போய் இறங்கியதும் மீண்டும் ஒருமுறை டிக்கட் விபரத்தை விசாரித்துக்கொண்டார். கடைசியில் மிகவும் துணிச்சலோடு ஐந்து ரூபாய் டிக்கட்டே வாங்கினுர். அவர் கொட்டகைக்குள் நுழையும்போது பலபேர் 'நமஸ்காரம்' சொன்னுர்கள். சிலர், கை குலுக்கினுர்கள். இத்தனைபேர் அன்புக்குப் பாத்திரமான இவர் யாரென்று மற்றவர்கள் கூர்ந்து நோக்கினுர்கள். ஒருவர், முன்னுல் வழிகாட்டிக் கொண்டு நடந்தார். மகத்தான தலைவர்களின் கம்பீரத்தைப் புதிதாக வரவழைத்துக் கொண்டு தேசானந்தர் பின்னுல் நடந்தார். ஒருவர் ஓடிப்போய் சோபாவைத் துடைத்தார். மற்ெருருவர் வழியை ஒதுக்கினுர். தேசானந்தர் அமர்ந்தார். 'சோடா!' என்றது ஒரு குரல். 'காபி' என்றது மற்ெருன்று. 'பரவாயில்லை' என்று பணிவோடு ஒலித்தது தேசானந்தர் குரல். ஆனுலும் விட்டார்களா? அன்புக் கொடுமை விதவிதமான ஓசைகளை எழுப்பிற்று. காபியை ஆற்றினுர் ஒருவர். நாட்டு வெடிச் சத்தத்தோடு சோடாவை உடைத்தார் ஒருவர். ஆளுக்கொரு பக்கமாக தேசானந்தரிடம் நீட்டினுர்கள். இரண்டையும் இரண்டு கைகளில் வாங்கிக் கொண்டார் அவர். எதைக் குடிப்பதென்று அவரே தீர்மானித்துக்கொள்ள இரண்டு நிமிடம் பிடித்தது. பிறகு சோடாவை வைத்துவிட்டு மடமடவென்று காபியைக் குடித்தார்.

"நல்ல இளைஞர்கள். சூடான ரத்தம்! இது அப்படியே நாட்டுக்குப் பயன்பட வேண்டும்!" என்று தன் ஆசையையும் ஆசியையும் தெரிவித்தார். பலபேர், அவர் எப்போது வந்தார் என்று விசாரித்தார்கள். அவரும் அரசியல் தத்துவங்களை இணைத்தவாறு பதில் சொன்னுர்.

முதல் மணி! இரண்டாவது மணி! திரை தூக்கப்பட்டது. நாடகம் துவங்கிற்று.

முதற் காட்சியிலே ஒரு பெண், புள்ளிமான் போல் துள்ளி வந்தாள். வாட்ட சாட்டமான அவளை வைத்த கண் வாங்காது பார்த்தார் தேசானந்தர். அவள் பாடினுள்.

"கார் காலத்திலே வானம் சோகமாகக் காட்சி தருகிறது. கதிரவன் ஒளி காணக் கிடைக்கவில்லை. மலர்கள் பூத்துக்குலுங்குகின்றன. மங்கையர் அவற்றை நெருங்க முடியவில்லை. வான் வில்லின் வர்ண ஜாலங்களைத் தெளித்து வைத்துக் கொண்டிருக்கும் அரிய பெரிய விழிகளாலே கன்னியர்கள் உலகத்தைப் பார்க்கிருர்கள். அங்கே நடக்கும் நாடகங்கள் அவர்களுக்குப் புதுமையாக இருக்கின்றன. பள்ளிக்குச் செல்லும்போது தோன்ருத காட்சிகள் பருவம் வந்த பின் தோன்றுவானேன்? அதிலும் கார் காலத்தில் அது, அதிகரிப்பானேன்! எப்போதும் பார்த்த ஆடவனைத் தானே இப்போதும் பார்க்கிருர்கள்! ஆடவர்களின் அசைவெல்லாம் இப்போது உணர்ச்சிகரமாகக் காட்சியளிப்பதேன்?

பஞ்சணைக்குத் தனித்தன்மை ஏற்படுவானேன்? பார்க்குமிடமெல்லாம் ஏதோ ஒன்று நீக்கமற நிறைந்திருப்பதாக உள்ளுணர்ச்சி தோன்றுவானேன்? ஆம்; மனித வாழ்விலே மூன்று படிகள் உண்டு: ஒன்று-ஒன்றுமே யறியாத மழலைப் பருவம்; இரண்டு - மிரண்டு பார்க்கும் இளம் பருவம்; மூன்று-ஊன்றி நடக்கும் முது பருவம். முதலாவது, மூன்ருவது பருவங்களில் மனிதர்கள் உலகத்தை நடத்துகிருர்கள். இரண்டாம் பருவத்தில் உலகம் மனிதர்களை நடத்துகிறது. உணர்ச்சி, தன் வயம் இழந்து போகிறது. உலகம் அதைப் பறித்துக் கொள்கிறது. கடிவாளத்தை எஜமான் கையில் கொடுத்த குதிரை மாதிரி மனிதன் நடக்கிருன்: திசை தப்பினுல் சீரழிகிருன்; எச்சரிக்கை இருந்தால் இன்பங்காணுகிருன். ஏ, இரண்டாம் படியில் நிற்கும் இளமைப்பருவமே! உன் உணர்ச்சிகளை அந்தரங்கங்களை யெல்லாம் உலகம் எடுத்துக்கொண்டு விட்டது. பாதையில் பார்த்து நட! பையப் பைய நடந்துபோ! காலத்தை இனிமையாகக் கடந்து போ! குன்றின்மீது உன்னை ஏற்றி வைத்த காலம் குடை சாய்த்து விடாமல் எச்சரிக்கையாயிரு."

—இந்தக் கருத்தில் அவள் இனிமையாகப் பாடினுள்.

தேசானந்தர் அதை ரசித்துக் கவனித்தார். காங்கிரஸ் மேடைகளிலே கர்ண கடூரமான இலக்கணப் பிழைகளோடு கூடிய தேசியப் பாடல்களைக் கேட்ட அவரது காதுகளுக்கு, இப்போது அவர் கேட்ட நாடகப் பாடலின் சொற் சுத்தம், பொருட் சுத்தம் மிக இனிமையாய் இருந்தது. பாடும்போது அந்தப் பெண் ஆடினுள். இரண்டோடும் கூடிச் சுவை தந்தது அவள் மேனி. தேசானந்தரின் இதய தத்துவம் நாட்டு விடுதலையில் முழுக்க ஊன்றியிருந்தாலும் நடுத்தர வயது வாலிபர் ஆதலால் மூன்று சுவையும் அவர் கண்ணையும் கருத்தையும் இழுத்தன. அந்தப் பெண் மீது அவருக்கொன்றும் ஆசை ஏற்பட்டு விடவில்லை. ஆனுலும் அவர் மனைவி கோமளத்தின் நினைவு வந்தது அவருக்கு. "அவளும் இப்படி ஆடினுல், பாடினுல்...

முல்லை
மார்கழி இதழ் தயாராகிறது
★ கண்ணதாசன் எழுதும்—முல்லைப்பாட்டு
★ கண்ணதாசன் எழுதும்—கவிதை
★ நா. பாண்டுரங்கன் எம். ஏ. எழுதும்—சிறு கதை
★ பாலம் —குஜராத்திச் சிறு கதை
— மற்றும் பல —
மூவர்ண முகப்பு—64 பக்கங்கள்
4 அணு தான்.
★ முல்லை - கார்த்திகை இதழ் கைவசமில்லை

சிச்சீ! குடும்பப் பெண் ஆட்டவாவது! அவள் இருக்குமிடந்தான் அவளுக்குச் சரி! அவர் ஒரு முறை எழுந்து உட்கார்ந்தார். எழுந்ததைப் பார்த்த ஒரு ரசிகன், என்னசார் வேண்டுமென்றான்? அவசரமாக 'ஒன்றுமில்லை' என்று கூறிய தேசானந்தர், மீண்டும் நாடகத்தில் நாட்டஞ் செலுத்தினர். 'இவள்தான் சீதாவா? சீதா பிள்ளை பெற்றவளாயிற்றே! பிள்ளை பெற்றதற்கான அறிகுறி இவளிடம் ஒன்றும் இல்லையே! ஓகோ! இவள் பழைய காலத்து பாணி போலிருக்கிறது? பெற்றவர்களானாலும் பெருதவர்கள் போல் தோற்றம் தருவார்கள் அல்லவா பழைய காலத்துப் பெண்மணிகள்! அந்தச் சுவட்டில் வந்தவள் போலிருக்கிறது?'' -இப்படி, தேசானந்தர் எண்ணமிட்டுக் கொண்டிருக்கும்போதே இன்னொரு பெண்ணும் மேடைக்கு வந்தாள். அவள் இவளைக் காட்டிலும் பலவீனமாக இருந்தாள். வந்ததும் வராததுமாக முதற் பெண்ணைப் பார்த்து, ''அடி தோழி!'' என்று அன்பு கனிய அழைத்தாள். தேசானந்தர் இப்போது விழித்தார். ''முன்னவள் தோழி போலும்! பின்னவளே தலைவி போலும்! சரி, சரி! இவளே சீதா!'' என்று நிரந்தரமான முடிவுக்கு வந்தார். அவர் முடிவு நிரந்தரமானாலும் அதுவரையிலும் மேடையிலே நடந்த காட்சி அந்தரத்திலேயே நின்றது. தலைவியும் தோழியும் பேசினர்கள். தான் ஒரு பெரிய இடத்துப் பிள்ளையைக் காதலிப்பதாக அவள் சொன்னாள். அவனது அங்க லட்சணங்களை அணு அணுவாக எடுத்துக்கூறினாள். ஆசையோடு கேட்டுக் கொண்டிருந்த தோழி, ''அவன் பெயர் என்ன?'' என்ற ஒரு கேள்வியைப் போட்டாள். அவள் சொல்லப் போகிறாள் என்று எதிர்பார்த்து, துள்ளி எழுந்து உட்கார்ந்தார் தேசானந்தர். தலைவி அமைதியாக பதில் சொல்வதை விடுத்து ஆத்திரமாகக் கூறினாள். ''அவன் இவன் என்று சொல்லாதேடி அறிவு கெட்டவளே'' என்றாள். தோழி தணிந்து, ''நல்லதம்மா! அவர் பெயர் என்ன?'' என்றாள். தேசானந்தர் இன்னொரு முறை நிமிர்ந்து உட்கார்ந்தார். ''அவர் ... அவர் ...'' என்று இழுத்தாள் தலைவி. தேசானந்தரின் நெஞ்சம் துடித்துக்கொண்டிருந்தது. ''ஐயோ! அவர் பெயரைச் சொல்லலாமாடி? நான் தமிழ்ப் பெண்ணுயிற்றே!'' என்று முடித்தாள் தலைவி. தேசானந்தரின் நாடி தளர்ந்தது. ஆனால் தோழி விடவில்லை.

''அட, சும்மா ஜாடையாக வாவது சொல்லேன்!'' என்றாள். தொக்கி நின்ற தேசானந்தரின் ஆசை பழையபடியும் துள்ளி நின்றது. ''சொல்லட்டுமா! சொல்லட்டுமா! கோயிலிலே இருக்கும் பாரு, அது!'' என்றாள் தலைவி.

''என்ன கோபுரமா?''

''இல்லையடி! கோபுரத்துக்கு உள்ளே இருக்கும் பாரு, அது!''

''என்ன, பொம்மையா?''

''சிச்சீ! கோயிலுக்கு உள்ளே இருக்குமடி!''

''சரி, சரி! நந்தி!''

''உ...ம்...! மந்தி!''

''ஓ! அதுதானா அவர் பேரு? புரிஞ்சுக்கிட்டேன்! திருவாளர் மந்தி அவர்களின் காதலியே, நீ வாழ்க!''

''சீ, போ!''

—என்று கூறிவிட்டுத் துள்ளி ஓடினாள் தலைவி. அவள் எதிரே ஒரு அழகிய இளைஞன் வந்தான். தோழி வேறு பக்கம் சென்றுவிட்டாள். தேசானந்தர் அதை உற்றுக் கவனித்தார். அந்த இளைஞனும் தலைவியும் காதல் மழை பொழிந்தார்கள். கட்டிப் பிடித்து ஆடினார்கள். மேடையை வீடாகவே மதித்து விளையாடினார்கள். தேசானந்தரின் தத்துவப்படி அது தவருனாலும், அவருங்கூட அதை ரசித்தார். ரசித்ததை வெளியில் காட்டிக்கொள்ளாமல் 'கௌரவ ரசிகர்கள்' மாதிரி முகத்தைச் சாதாரணமாக வைத்துக் கொண்டிருந்தார். காட்சியின் முடிவில் இளைஞன் அவளையே மணப்பதாக வாக்குறுதிகொடுத்தான். ''நாடக மாட வந்த என்னை வீட்டு விளக்காக அழைக்கிறீர்களே!'' என்று அவள் கேட்டாள். இளைஞன் உறுதிமேல் உறுதியை வாரி வழங்கினான். தாலிகட்டும் முன்பே அவர்கள் 'ஜாலி' ஆரம்பித்துவிட்டார்கள் என்பதற்கு அறிகுறியாக, அவர்களை அருகருகே நெருங்க வைத்து விளக்கை அணைத்துக் காட்டினார்கள். தேசானந்தருக்குப்பெட்டியில் கிடைத்த கடிதக் கதை அப்போதுதான் ஆரம்பமாவது போல் தோன்றிற்று.

அடுத்த காட்சியில் இரண்டு நகைச்சுவை நடிகர்கள் வந்து நாடகம் பார்த்த மக்களை 'சோக' வெள்ளத்தில் ஆழ்த்தினார்கள். அவர்கள் நகைச்சுவையில் தேசானந்தர் கண்ட புதுமை அவர்களைத் தவிர மக்கள் யாருமே சிரிக்காததுதான்! எப்போது அந்தக் காட்சி நிற்கும் என்று சிரமப்பட்டுக் கொண்டிருந்தார் தேசானந்தர். கடைசியில் ஒரு வழியாக ஜனங்களுக்கு விடுதலை கொடுத்துவிட்டு, நகைச்சுவை நடிகர்கள் மறைந்தார்கள். ''அப்பாடா'' என்று அலுப்புத் தீர்த்துக் கொண்டார்கள் மக்கள்!

அடுத்த காட்சி வந்தது. தலைவியைக் காதலித்த இளைஞன் தன் தந்தையோடு பேசும் கட்டம் அது. அவனுக்கு ஒருஅழகான, படித்த பெண்ணை மணமுடிக்கப் போவதாகத் தந்தை சொல்கிறார். அவன் மறுத்துரைக்கிறான். தான் அழுத்தமாக ஒருத்தியைக் காதலிப்பதாகக் கூறுகிறான். 'அமெச்சூர் நாடகத்' தந்தைகளின் வழக்கமான குணங்களோடு அந்தத் தந்தையும் ஆர்ப்பரிக்கிறார். தான் குறிப்பிடும் பெண்ணைத் தவிர வேறு யாரை அவன் மணந்துகொண்டாலும் சொத்தில் அவனுக்கு ஒரு சல்லிக் காசும் வராது என்கிறார். பையன் சீர் திருத்த மணத்தை எடுத்து வீசுவான் என்று தேசானந்தர் எதிர்பார்த்தார். ஆனால் நாடகத்தில் பையன் பணிந்தான். தந்தையின் சொல்லுக்குக் கட்டுப்பட்டான். தேசானந்தருக்கு இந்தத் தத்துவம் பிடிக்கவில்லையென்றாலும் கடிதக் கதையோடு அது இணைந்து நிற்பதைக் கண்டார். இன்னொரு சந்தேகமும் அவருக்குத் தோன்றிற்று. ''கதாநாயகன் தன் தந்தையின் சொல்லுக்குக் கட்டுப்பட்டது கடிதத்தில் வந்த கதைப்படி சரிதான்! ஆனால் இந்த அளவிற்காவது சூடாமணி, தந்தையை எதிர்த்தா பேசியிருப்பான்! அவனே விரும்பித் திருமணத்திற்கு ஏற்பாடு செய்ததாகவல்லவா, கடிதத்தில் வந்த கதை கூறிற்று?''

தேசானந்தர் இப்படி வரிக்கு வரி சிந்தனையில் ஆழ்ந்தார். நாடகம் தொடர்ந்தது. பின்வந்த காட்சிகளில் இளைஞனை மணக்கப் போகும் பெண் வந்து தோன்றினாள். அவள் நிறையப் படித்தவள் என்று வசனம் சொன்னது. அவள், தான் மணக்கப் போகும் வாலிபனைப்பற்றிக் கனவுகள் காண்பது, காட்சியாக நடந்தது.

அடுத்தொரு காட்சியில் இளைஞனின் காதலி தன்னை மணந்து கொள்ளும்படி இளைஞனிடம் மன்றாடுகிறாள். அவன் மறுத்துரைக்கிறான். ''உன்னை மணந்தால் ஊர் சிரிக்கும்'' என்கிறான். ''இன்பம் பெற்றபோது எவர் சிரிப்புக்குப் பயந்தீர்கள்?'' என்று அவள் கேட்கிறாள். ''இசைந்தது உன் தவறு! என் உயிரை ஏன் வாங்குகிறாய்?'' என்கிறான் அவன். ''அடபாவி! இதுதான் நீதியா?'' என்று அலறுகிறாள் அவள். (''இல்லையில்லை! சட்டப்படியே இது தவறு!'' என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டார் நாடகம் பார்த்த தேசானந்தர்.)

''நீ குயிலாகக் கூவினாலும், மயிலாக ஆடினாலும், கொக்காக நின்று தவம் புரிந்தாலும், கொல்லும் புலிபோல் கர்ஜித்தாலும் என் நெஞ்சம் இளகாது! இன்னொருத்திக்கு நான் மாலை சூடத்தான் போகிறேன்! இடையில் நீ ஏன் நிற்கிறாய்? வேண்டுமானால் ஆசை நாயகியாக இரு!'' என்று பொழிகிறான் இளைஞன். ''ஓடிப் போய்க் குழந்தையை எடுத்து வந்து அவன் முன்னால் நீட்டுகிறாள் தலைவி. கெஞ்சுகிறாள்; கதறுகிறாள். நாடக வசனம் உணர்ச்சிக் களத்தில் நின்று போராடியது. முகபாவத்திற்கு ஏற்றபடி, பலநிற விளக்குகள் மாறி மாறி வந்து விழுகின்றன.

''நீலி வேஷம் போடாதே! நெஞ்சில் உனக்கு இடமில்லை! மாலைசூடப்போவதுஅவளுக்கே! வந்து பார் என் திருமணத்தை!'' என்று கூறிவிட்டு வேகமாக உள்ளே சென்று விடுகிறான் இளைஞன். ''அம்மா! அம்மா!'' என்று கதறுகிறாள் தலைவி. குழந்தையும் கூடச் சேர்ந்து கதறுகிறது. விளக்கின் ஒளி சிவப்பாக மாறுகிறது. இடி, மின்னல், புயல் எல்லாம் உருவெடுக்கின்றன. அங்கும் இங்கும் ஓடி அலறுகிறாள் தலைவி. திடீரென்று ''கலங்காதே சீதா!'' என்று ஒரு அபயக்குரல் எழுகிறது. ரசிகர்கள் திடுக்கிட்டார்கள். நடிகை தன்னை மறந்துநின்றாள். விளக்குகள் ஏற்றப்பட்டன. தேசானந்தர் ஆவேசத்தோடு மேடையிலேயே ஏறிவிட்டார், அந்தப் பெண்ணுக்கு அபயம் கொடுக்க! மைக்கைக் கையிலே தூக்கிக் கொண்டார். அந்தப் புது 'நடிகரை'க் கண்டு சபை ஆச்சரியத்தில் மூழ்கிறது!



மெதுவான பட்டுத் துணிக்குள் மேனியைப் புதைத்துக் கொண்டு வந்த கோஷாப் பெண், தைமூரை நெருங்கிக் கொண்டிருந்தாள். ''மின்னும் ஆப்பிள் பழம் போன்ற வனப்புடைய பெண்கள், ஏன் முக்காடிட்டுக் கொள்கிறார்கள்? அகிலத்தில் காணப்படும் அத்தனையும் ஆண்டவன் படைத்தது என்றால், அத்தகைய வல்லமை பெற்ற ஆண்டவன் சிருஷ்டித்து வைத்த அழகை ஏன் கோஷாப் பெண்கள் மூடி மறைத்து அழுகிப் போகச் செய்ய வேண்டும்? சுடுமூஞ்சிகள், செதில் பாய்ந்த முகமுடையோர், கண்ணெடுத்தும் பார்க்க வொண்ணாக் குரூபிகள் கோஷாக்களாக இருக்கலாம்! அவர்கள் அப்படித்தான் இருக்க வேண்டும்! அந்தப் பெண்கள் கவிஞன் தீட்டும் காவியத்தைப் பழிப்பவர்கள்; இலக்கிய மாளிகைக்கு எதிரிலே முளைத்துவிட்ட எருக்கஞ் செடிகள்! அழகில்லாத பெண்கள் மூடி வைக்க வேண்டியவர்கள்'' என்று அவனது அந்தப்புரங்களில் சதா சர்வ காலமும் புலம்பிக் கொண்டு திரியும் தைமூர், அன்று அவனுடைய சபைக்கு ஒரு கோஷாப் பெண் வந்ததும் அவளுடைய முகத்தைப் பார்த்துவிட எவ்வளவோ பிரயத்தனப்பட்டான். ஏற இறங்கப் பார்த்தான். விழியிலே நாடி பார்க்கும் மருத்துவனைப் போல் கூர்ந்து பார்த்தான். கருவண்ணப் பளிங்குக்குண்டுகள் இமையாடிக் கொண்டிருப்பது போல் இரு கருவிழிகள் அபிநயம் பிடித்து நிற்பது, அவளுடைய முகத்திரையில் கண்களுக்காக வைக்கப்பட்டிருந்த சிறு ஓட்டைகளின் வழியாக அவனுக்குத் தெரிந்தது.

கொதித்துக் கொண்டிருக்கும் போதும், குழம்பிக் கொண்டிருக்கும்போதும் மனித மனம் கடந்த கால நிகழ்ச்சிகளை மறந்துவிடுகிறது. கண்ணாடித் தட்டில் நிற்க வைத்திருக்கும் அட்டைப் பொம்மைகள்போல் உணர்விழந்து விடுகிறார்கள். முடியிழந்து முதுகு காட்டி ஓடிய வேந்தர்கள் பலராலும் 'மண் தின்னும் ஓநாய்' என்று பட்டத்தைப் பெற்ற தைமூர், செயலற்றவனாய் அபீபைப் பார்த்தான். இத்தனை குழப்பங்களுக்குப் பிறகும் கூட அவனது முகத்தில் இளநகை மொட்டவிழ்த்து நின்றது. முடிவை எதிர்நோக்கி இருக்கும் வினயமும் அபீபின் புன்னகையில் ஒளிந்திருப்பதை தைமூர் கவனிக்காமலில்லை.

''பாதுஷா, கொட்டு முழக்கோடு கொடி கட்டி வாழ்ந்த துருக்கியச் சேனாதிபதி யஜ்தானியின் பாரியாள், உங்கள் எதிரில் நிற்பது!... பட்டுத் துணி போர்த்தி, பாதுஷா இருக்குமிடந்தேடி ஓடி வந்திருப்பது என் அன்னை!''-அபீபின் பேச்சில் கொஞ்சங்கூட தடுமாற்றமில்லை. பொல்லாத ஆயுதமொன்றை தன்னால் முடியாத நேரத்தில் பிரயோகிக்கத் திட்டமிட்டிருப்பவனைப்போல் துடுக்கோடு பேசினான்.

'' அபீப்!''...தைமூர் அவனையுமறியாமல் பழைய தைமூராகி விட்டான். பல்லைக் கடித்துக் கொண்டு அபீபுக்கு அருகில் போனான்.

யஜ்தானி, ''பாதுஷா! பாதுஷா! அவன் பசலை! இளங்கன்று! மன்னித்து விடுங்கள்'' என்று கூவினான்.

அபீபின் நிலா முகம் தைமூரை பின்னடையச் செய்து விட்டது. தாள முடியாத அன்புத் தொல்லையில் சிக்கிக்கொண்டவனைப்போல், ''என்னை ஏன் ஆட்டிவைத்து வேடிக்கை பார்க்கிறாய்! என்னை முரடனென்று குற்றம் சாட்டும் நீ, உன் அன்னையை சபை வரைக்கும் கொண்டு வருவதுமட்டும் நீதி என்று எந்த மத நூல் சொல்கிறது?''-தைமூரின் குரல் தளதளத்தது. தேசங்களை யெல்லாம் தேம்பித் தேம்பி அழவைத்த அவன் பிறருடைய சபாமண்டபத்தில் அகப்பட்டுக் கொண்டவனைப்போல் திணறிக் கொண்டிருந்தான். தொடர்ந்து பேச அவன் தொண்டையிலே ஜீவனில்லை. ''அபீப், நாளை மாலையைச் சுற்றிப் பார்த்த யஜ்தானி பெருமூச்சு விட்டான். எதைக் கொண்டும் வியப்புக் கொள்ளாத தனித் தன்மை பெற்றிருந்த ஹபீப், தைமூரைப்பற்றியே யோசித்துக் கொண்டிருந்தான். சேமியா கண்களைக் கசக்கிக்கொண்டே ஹபீபுக்கு அருகில் வந்தாள்.

''அபீப்! பாதுஷாவின் பக்கத்தில் நீ இருக்க வேண்டும் என்று யார் முடிவு செய்தாலும் நான் ஒப்பமாட்டேன். எத்தனை நாளைக்குத்தான் நீ ஆண் வேடத்தில் இருக்க முடியும்? நீ திருத்த நினைக்கும் பாதுஷாவை நான் ஒரு முறைதான் பார்த்தேன்? இன்றுதான் பார்த்தேன். இனி ஒருபோதும் பார்க்கமாட்டேன். சாவின் மனித உருவமாகவே எனக்குப் படுகிறார் பாதுஷா. எதிரியைச் சாம்பலாக்கிவிடுவது போல் பெருமூச்சு விடுகிறார். புயல் நேரத்துக் கடலைபோல் இருக்கிறது அவரது சிரிப்பு. எனக்கு நம்பிக்கையில்லை அபீப். பாதுஷாவின் நாக்கும் நடிப்புமே பயங்கரமான ஆயுதசாலையாக இருக்கிறது. அதற்குள் நீ எப்ப

3
★ கொலுமண்டபத்திலே கோஷாப்பெண்!
★ குழம்பித் தவித்தான் தைமூர் பாதுஷா!
★ குறுநகை புரிந்தாள் காரிகையொருத்தி!

நீ வரவேண்டும்! யஜ்தானி! அதற்கு நீர் அனுமதியளிப்பீர் என நம்புகிறேன்.'' என்ற இரண்டு வாக்கியங்களை எப்படியோ கக்கிவிட்டு தைமூர் கிளம்பி விட்டான்; திரும்பிப் பார்க்கவில்லை. மரத்தால் செய்து ஒட்டப்பட்ட அவனது வலது கால் தரையில் ஊன்றும்போது ஏற்படும் 'டக் டக்' என்ற சத்தம் குறையும்வரை அபீபும் யஜ்தானியும் நின்ற இடத்திலேயே அசையாது நின்றார்கள்.

அபீபின் தாயான சேமியா. தைமூர் போன பக்கம் திரும்பிப் பார்த்தாள். எந்தவிதமான அதிசய சக்தியுமில்லாமல் உலகம் யாருக்கு என்று கேட்கும் திராணி பெற்ற தைமூர் தன்னந்தனியனாய் நொண்டிக் கொண்டே போய்க் கொண்டிருந்தான்.

★

யஜ்தானிக்கென ஒதுக்கி விடப்பட்டமாளிகைக்கு மூவரும் வந்து சேர்ந்தார்கள், சித்திரக் கூடம் போன்ற அந்த மாளிகை

டிப் புழங்கப்போகிறாய்? முரடர்களின் சுபாவம் மிகக்கொடியது. மழலைக் குழந்தையாகவும் நடிப்பார்கள் முள்ளம் பன்றியாகவும் மாறி விடுவார்கள். தட்டிக் கொடுப்பதும், வெட்டிக் கொல்லுவதும் அவர்களுக்குச் சர்வ சாதாரணம். காரணமில்லாமற் புகழ்வார்கள், அது போலவே விசாரணை இல்லாமலே விலங்கு பூட்டி காராக்கிரகத்திற்கு அனுப்புவார்கள்.

''நிலையில்லாத மனதுடையோரிடம் எப்படிப்பட்டவர்களும் நல்ல பெயர் வாங்கமுடியாது. அவர்களுக்கு சுயமாகச் சிந்திக்கத் தெரியாது. சுத்தமாகவும் அவர்களால் வாழ முடியாது.''

அபீப், அன்னையின் இந்த உபதேசங்களையெல்லாம் அலட்சியமாக கேட்டுக் கொண்டிருந்தாள்.

''அபீப், நீ என்ன தைரியத்தில் இப்படி இருக்கிறாய் என்பது எனக்குத் தெரியாமலில்லை. முரட்டு ராஜாக்கள் மனித சமுதாயத்தை எதிர்த்து நிற்கும் வெறிக்குணம் கொண்டவர்க அறிந்தும் தவறு செய்வார்க அழிவுப் பாதை என்று தெ தும் எதிர் நீச்சல் போடுவார்க கடைசி நேரத்தில், வேடத்தை களைந்து விடலாம், பெண்ணு வில் அவன் முன் நிற்கலா என்று நீ நினைப்பாயானால் அ சிறு பிள்ளைத் தனமான மு வாகும்.'' என்று சேமியா க கலங்கக் கூறினாள் மீண்டும்!

சேமியாவின் குரல் கேட் யஜ்தானி கொல்லைப்பக்கமா இருந்து ஓடி வந்தான். ''என் அபீப்! தலைக்கு மீறி பெண்ணாகி விட்டாய்? ஆ வேடத்தில் இருந்து கொண் பாதுஷாவை அதிக நாட்களுக் ஏமாற்ற முடியாது. தெரிந்தா தோலை உரித்து விடுவார். எதி களின் சதி நுட்பங்களையெ லாம் மிக எளிதில் தகர்த்தெ யும் தைமூரிடம் உன்னுடை அசட்டுத் துணிச்சல் ஒருபோது பலிதமாகாது. பெரிய இடா கள் எப்போதும் ஆபத்துக்க நிறைந்தது அபீப்''—யஜ்தான யின் உபதேசங்களைக்கூட அபீ கேட்டுக் கொள்ளவில்லை. உ கத்திற்கே 'பூச்சாண்டி'யா இருக்கும் ஒரு ராக்ஷச மனித திருத்தினோம் என்ற பெ இருக்கட்டும் என்பதற்காகவே அபீப் அவளுடைய பெற்றோரி வேண்டுகோள்களை எல்லா ஒதுக்கித் தள்ளினாள்.

இப்போது அபீப் உம்மது ஆகிவிட்டாள். அவளுடை இயற்பெயர் உம்மதுல். ஆண் வேடம் தரித்ததும் அவள் பெய அபீபாக மாறிவிடும். அபீ என்றால் தோழன் என் பொருள்.

''உம்மதுல் உன்னை வேண் டிக் சேட்டுக்கொள்கிறேன். நீ தைமூரின் சபையில் அங்கத்தின ளாகக்கூடாது. அபவாதத்தில் சிக்கிக் கொண்ட துருக்கிய யுவதி கள் இதுவரை தப்பித்ததே கிடையாது. என்னுடைய அதி காரமும் அந்தஸ்தும் தான் உன் னைத் துருக்கியில் காப்பாற்றி யிருக்கிறது. உன்னுடைய தந்தை சாதாரண யஜ்தானியாக இருந் திருந்தால் நீ துருக்கியில் ஆண் வேடத்தில் உலவியிருக்க முடி யுமா? வாலிபப் பிரபுக்கள் உன்னை எப்போதோ கொத்திக் கொண்டு போயிருப்பார்கள்!'' யஜ்தானி தொடர்ந்தான் மறுபடியும்.

''ஆமாம், உம்மதுல், தைமூர், உலக ஒழுக்கங்களுக்கெல்லாம் புது விளக்கம் தருபவர். பிறகு ஏதாவது நடந்து விட்டால் நாம் வெளியிலே தலை காட்டமுடியாது. துருக்கி சிரிக்கும்!'' —சேமியா யஜ்தானிக்குக் குரல் கொடுத்து உதவினாள்.

'மன்னித்து விடுங்கள். நான் தைமூரின் சபையில் மந்திரி பதவி ஏற்க முடிவு செய்து விட் டேன். அமீர் தைமூரை ஆட் கொள்ள முடியுமென்ற நம் பிக்கை எனக்கு வேரூன்றி விட் டது. அவரை மனிதனாக்கி விடு வேன். இதயமுள்ள சக்கர வர்த்தி என்ற நிலைக்குக் கொண்டு வந்து விடமுடியும்.

— 11-ம் பக்கம் —

வாழ்க்கை ஒப்பந்தம் !

—3 ம் பக்கத் தொடர்ச்சி—

"அவர்கள் ஏன் குடிக்கிருர்கள் என்ரு ?"

"அவர்களா? அவர்களா? அது சரி. அவர்களைப்பற்றி தானே, என்னைப்பற்றி எண்ணவில்லையே" நண்பனின் குரல் நிலை எல்லாமே தடுமாறியது.

சிறிது நேரம் கண்களை மூடியிருந்த அவன் மீண்டும் என்னைப் பார்த்தான்.

"அதிருக்கட்டும் நீ எங்கே வந்தாய்?"

பணியாள், வறுத்து மிளகுகாரமிட்ட முந்திரிப் பருப்புக்களை பிங்கான் தட்டில் கொண்டு வந்து எதிரில் வைத்தான்.

நண்பனின் கேள்வி சாதாரண நிலையில் இருந்தால், நான் வேறு ஏதேனும் உடனே சொல்லியிருப்பேன். ஆனல் இப்போது என்ன சொல்வது என்று தயங்கினேன்.

"அவன் சிரித்தான் இல்லை. மது சிரித்தது."

நண்பன் மீண்டும் சிரித்தான். அந்த சிரிப்பில் கொஞ்சம் தெளிவிருந்தது. என்னைப் பார்த்தபடியே "நான் இங்குதான் இருப்பேன் என்று உனக்குத் தெரியுமா?" அவன் கொஞ்சம் தெளிவாகவே பேசினன். அவன் பேச்சு என்னை..என் இதயத்தையே சம்மட்டியால் தாக்குவது போலிருந்தது.

...கடையில் கூட்டம் மிகுந்தது; என் இதயத்தில் எண்ணற்ற எண்ணங்கள்..வேதனைக் குறிகள் வட்டமிடலாயின.

நண்பன் எழுந்தான். நானும் எழுந்தேன். அவன் மீண்டும் நாற்காலியில் தொப்பென்று விழுந்தான். நான் தூக்கி அழைத்துக் கொண்டு போனேன்.

★

முத்துவேலன் வீட்டிற்குச் செல்லு முன் நண்பன் குடிப்பது மட்டுமே எனக்குத் தெரிந்தது. அவன் வீட்டிற்குச் சென்று அவன் மனைவியின் எழிலான முகத்தையும் அன்பான இதயத்தையும் கனிவான பேச்சுக்களையும் இவனும் அவளும் பழகிய அந்த இன்பமான சூழ்நிலைகளையும் கண்ட பின்னரோ?

அவனைப் பிரிந்திருந்த ஐந்து ஆண்டுகளில் நடந்த நிகழ்ச்சி நினைத்தால்...

★

"...உயர்நிலைப் பள்ளிப் படிப்பு முடிந்ததும், முனிசாமி, நீயும் சென்றுவிட்டாய் வேலை தேடி. கல்லூரியில் புகுந்த எனக்கோ தனிமையும் பருவமும் என்னைப் புதியவனுக்கியது. இதனிடையில் பத்மா என் கண்ணில்பட்டு கருத்தில் புகுந்தாள். அவள் எனக்குத் தென்றலாகத் தெரிந்தாள். அவளின் இனிமையான குரல் எடுப்பான தோற்றம் எழிலான முகம் எல்லாமே எனக்கு புதிய பொருளாக இருந்தன. அவள் எனக்கு தூரத்து உறவுதான். மணந்து கொள்ளும் முறையும்கூட. எத்தனையோ முறை அதற்கு முன் கல்லூரி புகுமுன் கண்டிருக்கிறேன். ஆனல் அன்றெல்லாம் எழாத எண்ணம் எழுந்தது. அவளோ என்னை—என் எண்ணத்தை புரிந்து கொண்டவளாகவேத் தெரியவில்லை. "பெண்மை" அவளின் நடத்தைக்கு நான் கூறிகொண்ட முதற் சமாதானம் இது.

நாட்கள் ஓடின.

நான் அவளைமணந்துகொள்ள வேண்டும் என்ற என் எண்ணத்தைப் பெற்றவர்கட்குத் தெரியச் செய்தேன். அவளைப் பெற்றவர்களும் அது கேட்டுமகிழ்ந்தார்களாம். ஆனல் அவள் என்னை மணந்துகொள்ள மறுத்துவிட்டாள். முடியாது என்று தீர்மானமாக சொல்லிவிட்டாள்.

அன்று என் இதயமே வெடித்துத் தூளாகியது. என்னென்னவோ எண்ணினேன். தற்கொலை எண்ணங்கள்கூட வட்டமிட்டன. இறுதியில் வீட்டைவிட்டே வெளியேறிவிட்டேன்.

தேடியலைந்திருப்பார்கள். அன்னை தேம்பி கதறியிருப்பாள் மூன்று மாதம் நான் பைத்தியம் பிடித்தவன் போல நாட்டின் எங்கோ ஓர் மூலையில் சுற்றிக்கொண்டிருந்தேன். இறுதியில் ஒருநாள் செய்தித் தாளில் ஓர் அழைப்பு எனக்கு வந்திருந்தது. பத்மாவே அழைத்திருந்தாள். மன வேதனை தாங்கவில்லை. உங்களையே மணப்பேன் என்ற முறையில் விளம்பரமிருந்தது.

தேடிக்கிடந்த செல்வம்-நம்மை நாடி வருகிறது என்ற மகிழ்ச்சியோடு ஓடிவந்தேன். எண்ணியபடியே திருமணம் - எனக்கும் - என் பத்மாவிற்கும் நடந்தது.

ஆனல், அன்று இரவு..? அய்யகோ...இன்று நினைத்தாலும் நெஞ்சம் துடிக்கிறது. அன்றிலிருந்துதான் குடிக்கிறேன்.

...பத்மா வந்தாள், ஆசையும் பாசமும் என்னை நிலைகொள்ளச் செய்யவில்லை. ஏதேதோ பேசினேன். அவளோ சிலைபோல நின்ருள். குவளையில் இருந்த பாலை எடுத்து நீட்டினுள். அவள் கரத்தைப் பற்றியபடியே அதை கொஞ்சம் குடித்து அவளையும் குடிக்கச் செய்ய முயற்சித்தேன். முயற்சியில் பால் கொட்டியது.

அதற்கு பிறகு என்ன நடந்ததோ மயக்கத்தில் தூங்கிவிட்டிருக்கிறேன்.

ஏதோ சத்தம் கேட்டு திடுக்கிட்டு விழித்துக்கொண்டபோது நான் கண்ட காட்சி...அய்யோ நண்பா. என் பத்மா தற்கொலை செய்துகொள்ள முயன்றுகொண்டிருந்தாள்.

மணமாலையோடு பிணமாகத் துணிந்தாள். பாய்ந்து அவளை சாவின் பிடியில் இருந்து மீட்டேன். அவளோ சிலைபோல நின்ருள்-என் உடல்நடுங்கியது. என்ன குற்றம் செய்தேன்?

அவள் கூறவில்லை - மாருக நான் படுத்திருந்த படுக்கையில் இருந்து கடிதமொன்றை எடுத்து நீட்டினுள். அவளே எழுதியிருந்தாள். படித்தேன். அய்யோ முனிசாமி எப்படிச் சொல்வேன்! முத்திரைக்கும் என்று சிப்பியைத் திறந்தேன், செந்தேள் இருந்தது!

நண்பா! பத்மாவை பறிகொடுத்தவனுகிவிட்டேன் நான். எனக்கு முன்பே எவனையோ அவள் காதலித்தாளாம், காதலித்தவன் இன்று இல்லை. ஆனல் அவனின் சின்னம் அவள் வயிற்றில் வளர்கிறது. சாவுக்கு முன் நல்ல காரியம் செய்துவிட்டேன். உங்களை வீட்டோடு சேர்த்துவிட்டேன். என்னல் பிரிந்து போனீர்கள் என்ற அவச்சொல் இனி இல்லை. போகிறேன். மன்னித்திடுங்கள்"

இது கடிதமா? நீ சொல்..நான் எத்தனைத் துடித்திருப்பேன்.

சில விநாடி சிலைபோல நின்றேன். எதை எதையோ நினைத்தேன். இறுதியாக அவளைப் பார்த்து,

"மறந்துவிடு! அவன் இறந்ததாக எண்ணிவிடு. நீ விதவை —உன்னை—மணந்து கொண்டவன் நான் என்று எண்ணிக்கொள்" - நான்தான் இப்படி பேசினேன்.

அவளோ எரிமலைபோல பேசினுள். "அவர் கோழையா[ய்] இருக்கலாம். நானும் கோழை[]யல்ல. அவர் என்னை மற[ந்]திருக்கலாம். நான் மறக்[க] முடியாது. இந்த உடல் இ[னி] யாருக்குமே சொந்தமில்லை. உ[ங்]குக்கும் - உங்களுக்கும் களங்[க]மான இந்த பொருள் வேண்டாம்; விடை கொடுங்கள்" அவள் பேசினுள். இறுதிய[ில்] என் கண்ணீருக்காக அவ[ள்] வாழ ஒப்பினுள். நானே அவ[ள்] உயிரோடு வாழ்ந்தால் போது[ம்] அவள் விருப்பத்துடன் எப்ப[டி] வாழ விரும்புகிருளோ..அப்ப[டி] வாழ்ந்தால் போதும்! என் எ[ண்]ணம் இதுதான்.

எனக்காக அவள் வாழ்கிரு[ள்] அவளுக்காக நான் வாழ்கிறேன் சாவை விரும்பவில்லை. சாவி[ன்] விலை மிக மிகக் குறைவு அ[து] எனக்கு வேண்டாம்.

நண்பனே! அன்றிலிருந்[து] தான் குடிக்கிறேன். எனக்[கு] ஏற்பட்ட ஏமாற்றம் — அதிர்ச்[சி]யினுல் ஏற்பட்ட பழக்கம்.

. என் காதலுக்காக நான் குடி[க்]கிறேன். தன் கற்பிற்காக-பெ[ண்]மைக்காக அவள் அதைச் சகி[த்]துக்கொள்கிருள். தடுக்கவில்[லை] ஆமாம் நண்ப-நாங்கள் செய்[து] கொண்ட வாழ்க்கை ஒப்பந்[தம்] இது. ★

நண்பனின் கதையை நினை[த்]துக்கொண்ட எனக்கு நீண்[ட] பெரு மூச்சுத்தான் வந்தது-க[ண்]கள் கண்ணீரால் குளமாயின.

"இசையமுது"

தென்றல் வார ஏடு

உள்நாடு

ஆண்டுச் சந்தா	ரூ. 6 0 0
அரையாண்டுச் சந்தா	ரூ. 3 0 0

வெளிநாடு

ஆண்டுச் சந்தா	ரூ. 9 0 0
அரையாண்டுச் சந்தா	ரூ. 4 8 0

தென்றல் : சென்னை 6.

பழநி, ஆர். எம். கே. வேலுசுவாமி

சித்த வைத்தியசாலை.

56 வருட அனுபவம் பெற்றது.

தீராத கொடிய வியாதிகளையெல்லாம் தீர்த்து பல்லாயிரக்கணக்கான நற்சாட்சிகள் பெற்று இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் நிகரில்லாப் புகழ் பெற்றது.

பெண்களுக்கு ஓர் வரப்பிரசாதம்.

சூதக சம்பந்தமான சகல குற்றங்களும் நீங்கி புத்திர சந்தானம் உண்டாக பழநி ஆர். எம். கே. கெற்ப சஞ்சீவி எண்ணை சாப்பிடுங்கள்.

பெண்களுக்கு மாதாந்திரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்றுவலியை அந்த க்ஷணமே நிறுத்தும். எந்த மருந்திலும் தீராத எவ்வளவு நாட்பட்ட சூதக வயிற்றுவலியும், சூதக சிக்கலும் இதில் அவசியம் தீரும். காலாகாலத்தில கிரமப்படி பஹிஷ்டையாகும். கெற்பப் பையிலுள்ள 6-வித குற்றமும் தீர்ந்து கெற்ப உற்பத்தியை உண்டுபண்ணும். அனுபவத்தில் கைகண்டது. சூதகவயிற்றுவலி இருக்கும் வரை கெற்பம் தரிக்காது. மேற்படி வலி தீர்ந்து கெற்பம் தரிக்க வேண்டுமானல் பழநி, ஆர். எம். கே. வேலுசுவாமி கெற்ப சஞ்சீவி எண்ணை சாப்பிடுங்கள்.

தபால் செலவு உள்பட ரூ. 7-10-0.

தங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி! விபரமாய் எழுதுங்கள். கேட்லாக் இனும்.

பிரதம வைத்தியர் & மானேஜர் :—சித்த வைத்தியக் களஞ்சியம் ஆர். எம். கே. சிவசுப்ரமண்ய ஓம்.

ஆர். எம். கே. வேலுசுவாமி, சித்த வைத்தியசாலை.

தபால் பெட்டி நெ. 16, (டெலிபோன் நெ, 219) பழநி.

—"பொருந்தா மணத்திற்கு மருந்தா இது?"—

நானும் அவளும் காதலித்தாம் ; ஆனால் எங்கள் காதல், கூடாக் காதல் வகையைச் சர்ந்தது. ஏனென்றால், இருருடைய சாதியும் வேறுபட்டதாம்; தி விட்டுச் சாதி-சம்பந்தங் கூடாம். இப்படி எத்தனையோ சாக்குப் பாக்குச் சொல்லி எங்களை ஒன்று சர விடவில்லை. ஆனால் எங்களின் ள்ளங்கள், இன்னும் ஒன்று சர்ந்துதான் இருக்கின்றன.

'பாசங்கொண்டு இரண்டு பேரும் ழகினோமே காதல் பூண்டு; நல்ல ாம்பு போலொருவன் நடுவில் குந்துவிட்டான்.' அந்த 'நல்ல ாம்பு'தான் அவளுக்குக் கணவன் னக்குச் 'சகலப் பாடி.'

அவள் புருஷனோ, 'குத்துக்கல்லு போலக்குண்டாங் குண்டா'னென்று இருக்கிறான்.' இந்த நிலையில் நான் அவளுடன் பேசலாமா? பேசினால் ன் முதுகு என்னவாவது? அவளைப் பார்க்கும்போதெல்லாம், அவனுடைய 'கிருதாமீசை'தான் ன் முன்னால் தோன்றி என்னைப் யமுறுத்தும்! எனவே முன் ாக்கிரதையாகவே நடந்துகொண்டேன். அதாவது அவளைக் குர்ரென்று பார்ப்பதுமில்லை; அவளிடம் ளுக்கென்று சிரிப்பதுமில்லை. அக்கம்பக்கம் ஆளில்லாவிட்டாலும்; நான் படமெடுத்த நாகம் போல அவளைப் பார்க்காமலே போய்விடுவேன்.

நேற்று தற்செயலாக 'அவள்' தெருப்பக்கம் போனேன். முற்றத்திலே 'அவள்' நின்றுகொண்டிருந்தாள். ஆனால் 'அவள்' பக்கத்திலே 'அவன்' இல்லை. எனவே எனக்குக் கொஞ்சம் உயிர் வந்தது போலிருந்தது. இருந்தாலும் இதயத்திலே கொஞ்சம் பயந்தான். இல்லை என்று சொல்லமுடியுமா? ஒருவேளை, வீட்டுக்குள்ளே அவன் இருந்தால்..இதை எண்ணியதுமே, ன் 'பஞ்சபூதங்களும்' அஞ்சி ஒடுங்கின. எனவே அவளிடம் பேசவும் வேண்டாம்; அவளைப் பார்க்கவும் வேண்டாம்-என முடிவு கட்டி 'யோக்கியன்'போல நடக்க ஆரம்பித்தேன். அவளோ துணிந்து பேசினாள்-நானும் பேசினேன்.

"மிளகாய்ப் பழம் போல
முத்தத்திலே நானிருக் கேன்
படமெடுத்த நாகம் போலப்
பாக்காமப் போறயே."

"முத்தத்தில் நிண்ணிடுவேன்
முழி சுருட்டிப் பாத்திடுவேன்
உன் புருஷன் கோபக்காரன்
ஓடவிட்டு வெட்டிடுவான்"

★

"மதுரைக்குப் போகையிலே
மாறு கண்ணு எஞ்சாமி
வாழை மட்டைத் தாழம்பூவு
வாங்கி வந்தாலாகாதா""

★

"வாங்கியும் வருந்திருவேன்
வச்சழகும் பாத்திருவேன்
உன் புருஷன் கோவக்காரன்
ஓடவிட்டுக் குத்திடுவான்."

★

"கட்டிலுண்டு மெத்தையுண்டு
கதவோரம் எம்படுக்கை
வீட்டிலொரு வேங்கையுண்டு
வேளை பார்த்து நீங்க வாங்க."

★

"ஊரும் உறங்க விட்டு
உன்புருஷன் தூங்கவிட்டு
நல்லபாம்பு உருவங் கொண்டு
நான் வருவேன் சாமத்திலே."

"சன்னலைத் திறந்திருப்பேன்
சமுக்காளம் விரிச்சிருப்பேன்
சொன்னபடி வல்லையானால்
பின்னே பாரென் கைவரிசை."

★

இன்று காலையில் அவளைச் சந்தித்தேன். உடனே நான் கேட்டேன்.

"மழைக்கா இருட்டிலே
வந்து நிண்ணேன் உன்வீட்டிலே
கொண்டை நனைந்ததடி
கூரை நிழல் பத்தாமல்."

அதற்கு அவளோ,

"சாமி வருவாயிண்ணு
சாக மஞ்சள் குளிச்சிருந்தேன்
உன் சத்தங்கேட்ட நேரத்திலே
'சனியன்' வந்துமுத்தமிட்டான்."

★

எத்தனை நாளைக்குத்தான் அவள் புருஷன், கண்ணிலே விளக்கெண்ணையை ஊற்றிக்கொண்டு காவல் காக்கமுடியும்! ஆமாம், நிச்சயம் அவள் காதலுக்குச் சலுகை காட்டத்தான் செய்வாள். பொருந்தாத திருமணத்திற்கு மருந்து கள்ளப்புருஷன் தானே! இதில் என்ன அதிசயம் இருக்கு?

—அ. பிச்சை

★ ★ ★

தைமூரின் காதலி

— 9-ம் பக்கத் தொடர்ச்சி —

என்னுடைய வேடத்தையும் நான் காப்பாற்றிக்கொள்ள முடியும்! ஒருவேளை என் வேடம் வெளிப்பட்டாலும் என்னுடைய தூய்மையை எவரும் திருடிவிட முடியாது. தைமூரைத் திருத்த வேண்டும், என்கிற ஆசையில் இதுவரை உங்களுக்குத் தெரியாமல் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு ரகசியத்தை சொல்கிறேன். நீங்கள் பெருமைப்படுவீர்கள். என்னை வாரி அணைத்து முத்தமிடுவீர்கள். திடீரென்று நான் ஏன் ஆண் வேடம் போட்டுக் கொள்ளத் துணிந்தேன்? பதினேழு வயது வரை மோகினி போல மாடத்து வாழ்க்கையில் மிதந்த நான் ஏன் வாலிப வேடத்தை விரும்பினேன்?"-அழகி உம்மதுலால் மேற்கொண்டு பேச முடியவில்லை. தேள் கொட்டிய வெண்கலப் பத்திரத்திலிருந்து தண்ணீர் கசிவதுபோல் அவளது கண்களினின்று நீர் வழிந்தது. யஜ்தானியும் சேமியாவும் திகைத்தார்கள். உம்மதுல் அழுது, அவர்கள் பார்த்ததில்லை. அவள் கண் சிவக்கச் சகிக்கமாட்டார்கள்.

"என்ன உம்மதுல்! சொல்! என்ன நடந்தது?" என்று துடித்தான் யஜ்தானி.

அப்போது வாசலில் ஏதோ சத்தம் கேட்டது. மூவர் விழிகளும் வாசலை நோக்கின. பெரிய கம்பளி ஒன்றைப் போர்த்திக்கொண்டு தைமூர் அடிமேல் அடி எடுத்து வைத்தபடி மாளிகைக்குள் நுழைந்தான்.

(தொடரும்)

மதுர கீதம்

புகை வண்டியில் இருந்தவர்கள் என்னையே கோட்டக் கோட்டப் பார்த்துக் கோண்டிருந்தார்கள். நான் தேலுங்கில் சுந்தர கீதம் இழைத்துக் கோண்டிருந்தேன்.

ஒவ்வோருவரும் என்னை ஏற இறங்க பார்த்து குசு குசுவென்று பேசுவது என் காதில் விழாமல் போகவில்லை. இருந்தாலும் என்ன செய்வது? பிழைக்க வேறு வழியில்லாத போது வெட்கத்தையும் நாணத்தையும் எடை போட்டுக் கோண்டிருக்க முடியுமா என்னால்?

தேலுங்கில் பாடுவதை நிறுத்திவிட்டு தமிழில் பாடத் துவங்கினேன். நான் யாரையும் கவனிக்காமல் வேளியில் பார்த்துக் கோண்டே பாடினேன். போதுவாக, பாடும்போதோ, பிச்சை எடுக்கும்போதோ, வண்டியில் உள்ளவரைக் கூர்ந்து கவனிப்பதில்லை.

சாதாரணமாகவே கதை கட்டும் இவர்களை உற்றுக் கவனித்தால் சந்தேகம் வேண்டாம். வேறும் வாயை மேல்லுபவர்களுக்கு அவல் கிடைத்தால் கேட்கவா வேண்டும்?

பாட்டை முடித்துக் கோண்டு திரும்பினேன். இதுவரையில் சுதந்திரமாக என்னையே சுவைத்துக் கோண்டிருந்தவர்களின் பார்வை எல்லாம், என் விழிகளில் பட்டு சரிந்து நழுவின,

காவிரி மண் போல் சேழிக்கும் என்னை கல்யாணச் சாப்பாடு போல் சாப்பிட்டுக் கோண்டிருந்தார்கள், இதுவரையில்! நீண்ட பெருமூச்சு விட்டேன். நான் என்ன செய்வது? தடுக்க முடியுமா, அல்லது தடை போட முடியுமா?

பையப் பைய கையை நீட்டிக்கோண்டே மேதுவாக ஒவ்வோருவரிடமும் வந்து நின்றேன்.

ஒருவர் என் கையில் இரண்டணாவை அழுத்தி, உறி...உறி... என்றார். பாவம்! வயதானவர்! பேண்சாதி ஏமாற்றியிருப்பாள் என்று எண்ணி மனத்திற்குள் நகைத்துக்கோண்டே நகர்ந்தேன்!

வண்டி ஓடிக்கோண்டிருந்தது? தேன்றல் மேல்ல பாடிக் கோண்டிருந்தது! வண்டியிலிருந்த எல்லோரும் ஆடிக்கோண்டிருந்தார்கள்!

"உலகம் கேட்டுப்போவது இவர்களால்தான்" இதுவரை என்னையே மோய்த்துக் கோண்டிருந்தவர் உதிர்த்த போன் மோழிகள் இவை!

"இனிமேல் தான் கேட்டுப் போகவேண்டுமா, அதுதான் கேட்டுப் போய்விட்டதே" என்று ஒருவர் சப்புக் கோட்டினார். அவரின் தோளில் தோங்கிய அங்கவஸ்திரம் கீழே விழுந்தது.

"பிச்சை எடுத்தாலும் பரவாயில்லையே சார்! பிச்சையா எடுக்க வருகிறார்கள்?"

என்னை ஒரு முறை பார்த்துக் கோண்டேன். நீண்ட கைகள்! வாளிப்பான உடல்! செம்மண் முகம்! சிவப்பு ரவிக்கை! அங்கே சில கிழிசல்கள்!

"சை... இந்தக் கிழிசல் போதுமே, பணமில்லாமல் பசியாற! மேதுவாக, தோங்கிக் கோண்டிருந்த புடவை தலைப்பைச் சுற்றி இழுத்துப் போர்த்திக் கோண்டேன்.

ரயில்வண்டி ஓடிக்கோண்டிருந்தது!"

"பிச்சை எடுத்தே உன் வாழ்நாளை எல்லாம் கடத்திவிடலாம் என்று நினைக்கிறாயா?" என்றார் ஒருவர், என்னைப் பார்த்து. திடீரென்று கேட்டது என்னைத் தூக்கி வாரிப் போட்டது. நான் ஒன்றும் சோல்லாமல் இருப்பதைக் கண்டு, மீண்டும் அந்தக் கேள்வியையே கேட்டார். அவரைப் பார்த்தேன். சுமாரான தோந்தி! அங்குமிங்கும் நரைமயிர்! திடீரென்று எங்கிருந்து இவ்வளவு தரிசனம் வந்ததோ? தன் வயிற்றைத் தடவிக்கோண்டே என்னிடம் மிகவும் அக்கறை கோண்டவர்போல் காட்டிக் கோண்டார்.

"யாராவது வேலை கோடுத்தால் அதை ஒழுங்காகச் செய்வாயா?" என்றார்.

இக்கேள்வி என்னைத் திணற வைக்கவில்லை!

"நல்ல இடத்தில் வேலை கிடைத்தால் இப்பிழைப்பை விட்டு விடுவேன்...ஆனால்..." என்று நிறுத்தினேன்.

"ஆனால்...!"

"வேலைக்கு வைத்துக்கோள்ளும் எவரும், நான் ஏழைப் பேண்தானே என்று நினைத்துவிடுகிறார்கள்.

"அப்படியென்றால்..." என்றார்.

புரியாமல் கேட்டாரோ, புரிந்துதான் கேட்டாரோ எனக்குத் தேரியவில்லை.

"நான் எத்தனையோ வீடுகளில் வேலை செய்துவிட்டேன். ஒவ்வோருவரும் என்னை வேலை செய்ய விடுவதில்லை, அதிகமாக என்னிடம் அக்கறையும், பரிவும் காட்டுகிறார்கள்."

திடுமேன எல்லோர் தலைகளும் நேளிந்தன. கேள்வி கேட்டவரின் நேற்றி சுருங்கியது. பிறருக்கு நியாய அநியாயத்தைக் கூறும் அவர்களுக்குத் தேரியாதா நான் கூறியதின் போருள்!

"எனக்கேன்னவோ மூன்று வேளைதான் பசி எடுக்கிறது. வேலை தருகிறேன் என்று சோல்லி அழைக்கும் சில பேரிய மனிதர்களுக்கு, எல்லா நேரமும் பசிக்கிறது!"

தோண்டையில் தங்கிய எச்சிலை காரி வேளியில் துப்பினேன்! எவர் முகத்திலும் ஈயாடவில்லை. நேடுநேரமாக என்னையே கேடுவோட்டமாகப் பார்த்துக்கோண்டிருந்த ஒருவர், அப்படியே சுருங்கிவிட்டார்! வண்டி 'கும்மிடிபூண்டி'யில் நின்றது! நான் இறங்கினேன். என்னையே எதிர்பார்த்துக்கோண்டு நின்ற என் கணவர் நோண்டிக்கோண்டே, "மதுரம்" என்று வாய் இனிக்க அழைத்துக்கோண்டே நேருங்கினார்.

"இன்னும் இரண்டு நாளைக்கு கவலையே இல்லை மச்சான்!" என்றவாறு "க்ளுக்" என்று சிரித்தேன்.

—அரசிளங்கோ.

கடற்கரையும் ஹங்கேரியும்

எகிப்து விஷயத்தில் இங்கிலாந்து நடந்து கொள்ளும் போக்கைக் கண்டித்து நாடெங்கணுமுள்ள அரசியல் கட்சிகள் கண்டனம் தெரிவித்ததோடுமல்லாமல், காமன் வெல்த்திலிருந்து இந்தியா விலகவேண்டுமென்றும் தீர்மானம் நிறைவேற்றி வருகிறார்கள். ஜனநாயகத்தை மதிக்கும் பகுதிகளில் இப்படித் திர்மானம் நடத்துவதும், அதில் சர்வ கட்சிகள் கலந்து கொள்வதும் எதிர்க்கட்சிகளின் கண்ணியத்திற்கு ஒரு எடுத்துக் காட்டாகும். அத்தகைய கண்ணிய மிகுந்த செயல்கள் இந்தியத் துணைக்கண்டத்தில் தென்னாட்டில் தான் நிறைவேறுகின்றன. அதிலும், தமிழ்நாடு, தமிழ்ப் பண்பு, தமிழ்க்கலாச்சாரம் இவைகளைப் புறக்கணித்துவிட்டு, விழிகளை விசாலமாக விரித்துப்பார்ப்போர் சேர்ந்து விட்டால் ஏதாவது 'திருவினை'கள் நடந்துதான் திருகின்றன.

18-11-56ம் தேதி மாலை சென்னை திருவல்லிக்கேணி கடற் கரையில் சர்வ கட்சிக் கூட்டமொன்று நடைபெற்றது. கூட்டத்திற்கு திரு எச். டி. ராஜா தலைமை வகித்தார். திருவாளர்கள்: என். வி நடராசன், காஞ்சி கல்யாணசுந்தரம், தோழியர் விஜயலட்சுமி, எஸ். ராமனுஜன், 'சுதந்திரம்'—அருணாசலம், கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த முத்தையா ஆகியோர் கலந்து கொண்டனர். சகல கட்சியைச் சார்ந்தோரும் திரளாகக்கூடியிருந்தார்கள். தோழர் முத்தையா பேசும் போது ஈடனில் தொடங்கி இந்நாட்டு 'பண்ரொட்டி முதலாளி'கள் வரை ஒரே பிடியாய்ப் பிடித்தார். அந்த உடன்படிக்கை இந்த உடன்படிக்கை என்றெல்லாம் உணர்ச்சி பொங்கப் பேசினார். அதையெல்லாம் கூட்டம் சகித்தது. மௌனமாகவே இருந்தது. அடுத்து, காஞ்சி கல்யாணசுந்தரம் பேசினார். ஈடனின் வெறித்தனத்தைக் கண்டித்து விட்டு, இந்திய சர்க்காரின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையைப் பலமாகக் கண்டித்துப் பேசினார். உள்நாட்டுக் கொள்கையைப் பற்றிப் பேசும்போது ஒரு இடத்தில் ''ஹங்கேரி'' என்ற சொல்லைத் தான் அவர் உபயோகித்தார். அவ்வளவுதான்! கூட்டத்தின் தென் திசையில் உட்கார்ந்திருந்த விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய ஒரு சிலர் 'ஆகா ஊஹூம்!' என்று துடிக்க ஆரம்பித்து விட்டார்கள். அக்ரமத்தைக் கண்டிக்கும் போது, கொடியவனைக் கண்டிக்கும் போது கண்ணுக்குத் தெரியும் இன்னொரு கொடுமையை உதாரணத்திற்குக் காட்டுவது தவறல்ல என்பதை ஏனோ 'அந்தச் சிலர்' உணரவில்லை. இத்தனைக்கும், ஈடனின் கொடுமையை ஹங்கேரி ரணகளத்தோடு ஒப்பிட்டுக் காட்டியிருந்தால், மானம் போகிறதே என்றாவது அந்தச் சிலர் கூச்சல் போடலாம்; கூட்டத்திலே குழப்பம் விளைவிக்கலாம். 'ஹங்கேரி' என்று சொன்னார். அதற்கு அவர்கள் விட்டேனா பார் என்றார்கள். என்ன ஆயிற்று? அடுத்துப் பேசியவர்களெல்லாம் எகிப்துடன் ஹங்கேரியையும் சேர்த்துக் கொண்டார்கள். தனி மரம் தோப்பாகுமா? அந்தச் சிலரின் கூச்சலால் என்னவது? வழக்கம்போல் அவர்கள் மிகவும் உழைத்துச் சம்பாதிக்கிற 'நல்ல பெயரை' இந்த முறையும் பொதுமக்களிடம் பெற்றுக்கொண்டு போனார்கள். **'நுணலும் தன் வாயாற்கெடும்'** என்பார்கள் புலவர்கள். அந்த வரியை இந்த வாரம் பொது உடமைக்காரர்கள் தங்களுக்கு உடமையாக்கிக் கொண்டார்கள்.

★

கேவலம்!

பதவியி லிருப்பவர்கள் என்ன வேண்டுமென்றாலும் செய்யலாம் போலிருக்கிறது! அவர்களுக்குக் கேள்வி கேட்பாடு என்பதே இல்லை போலும்! சமீபத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றை எண்ணும்போது நமக்கு மேற்சொன்னபடிதான் தோன்றுகிறது.

ஆந்திர மந்திரி காளா வெங்கட்ராவும் அவரது பியூனும் ரயிலில் சென்றார்களாம். பியூன் ஏறிய பெட்டியில் ரயில்வே குமாஸ்தா ஒருவர் உட்கார்ந்திருந்தாராம். பியூனுக்கு உட்கார இடம் கிடைக்கவில்லையாம். அதனால் அந்தக் குமாஸ்தாவை எழுந்திருக்கும்படி மந்திரி சொன்னாராம். ஆனால் அந்தக் குமாஸ்தா எழுந்திருக்கவில்லையாம். தனது பியூனுக்கு உட்கார இடம் கிடைக்காததால் மந்திரி கோபத்துக்கு ஆளாகியிருக்கிறார். உடனே போலீஸ்காரர்களை வரவழைத்து அந்தக் குமாஸ்தாவை இழுத்துக்கொண்டு போகச் சொன்னாராம். பாவம்! அந்த ஏழைக் குமாஸ்தா இழுத்துச் செல்லப்பட்டார். அது மட்டுமல்ல, போலீசார் அக்குமாஸ்தாமீது வழக்கும் தொடர்ந்திருக்கிறார்கள்.

பியூனாக இருந்தவன் பாடு தேவலைதான்! பிடித்தாலும் பிடித்தான், புளியங்கொப்பைப் பிடித்தான். தனக்குப் பரிந்து பேசும் ஒரு எஜமானரைக் தேடிக்கொண்ட அவன், உண்மையிலேயே சாமர்த்தியசாலிதான். பியூனாகப் பிறந்தவர்கள், தங்களுக்கு ஏதாவது இடவசதி வேண்டுமென்றால், தயவு செய்து காளா வெங்கட்ராவைச் சந்தியுங்கள். அவரிடம் பியூனாக இருக்க முயற்சி செய்யுங்கள் லாபம் உண்டு.

மேற்சொன்ன நிகழ்ச்சியைப் பற்றி, டெல்லிப் பாராளு மன்றத்திலே விவாதம் ஏற்பட்டிருக்கிறது. ''மத்திய சர்க்கார் இதுபற்றி என்ன நடவடிக்கை எடுத்தது?'' என்று ஓர் உறுப்பினர் கேட்டிருக்கிறார். அதற்கு ரயில்வே மந்திரி சொன்ன பதில் மழுப்புதலாகத்தான் தெரிகிறது. ''ஏதோ அடிதடி நடந்ததாகத் தெரிகிறது; அதனால் அது ராஜ்ய சர்க்கார் கவனிக்கவேண்டிய விஷயம். இந்தச் சம்பவத்தைப் பற்றி ரயில்வே அதிகாரிகள் ஒன்று சொல்கிறார்கள். ஆந்திர சர்க்கார் வேறொன்று சொல்கிறது. நாங்கள் தர்மசங்கடமான நிலையிலே இருக்கிறோம்'' என்று சொல்லியிருக்கிறார் ரயில்வே மந்திரி லால்பகதூர் சாஸ்திரி.

''மந்திரி காளா வெங்கட்ராவ் தான் குமாஸ்தாவைத் தாக்கும்படி தூண்டினார். அப்படியிருக்க, குமாஸ்தாமீது வழக்குப் போடப்பட்டிருக்கிறது'' என்று அனந்த நம்பியார் குறிப்பிட்டிருக்கிறார். காளா வெங்கட்ராவ் ஆந்திர மந்திரி என்பதைவிட, அவர் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் பொதுக்காரியதரிசி என்ற எண்ணத்தால்தான் ரயில்வே மந்திரி அவரைத் தப்புவிக்கப் பார்க்கிறார் போலும்!

உண்மையிலேயே ஆந்திர மந்திரி இத்தகைய மோசமான செயலைச் செய்திருந்தால், பண்பாட்டிலே நாட்டம் கொண்டவர்களின் உள்ளம் வருந்தத்தான் செய்யும். மத்திய சர்க்கார் இந்த விஷயத்தைத் தீர விசாரிக்க வேண்டும். மழுப்புவதோ, காலம் தாழ்த்துவதோ, பொறுப்பற்ற தன்மையில் நடந்து கொள்வதோ தகாது! அசட்டை செய்தால், மற்ற மந்திரிகளும் இது போல நடந்துகொள்ள ஆரம்பித்து விடுவார்கள்.

★

அந்த விளம்பரம்!

சென்னை அரசாங்கச் செய்தி இலாகா நாடகப் போட்டி ஒன்றை ஆரம்பித்திருக்கிறது. ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளையும் அதன் சாதனைகளையும் மக்களுக்கு விளக்கும் நாடகம் வேண்டுமாம். சிறந்த நாடகத்துக்கு ரூ. 1000 பரிசாம்.

இந்த நேரத்தில் நமக்கு நாடக ஆசிரியர்களின்மேல் அனுதாபம் தான் ஏற்படுகிறது. இந்த ஆயிரம் ரூபாய்ப் பரிசுக்காக, நாடக ஆசிரியர்கள் எவ்வளவு பெரிய பொய் சொல்லவேண்டி வருகிறது என்பதை எண்ணும்போது நமக்கு வருத்தம்தான் ஏற்படுகிறது! உருண்டோடும் பணங்காசுக்காக நாடக ஆசிரியர்கள் தங்களது மனச்சாட்சியினைக் கொல்லவேண்டுமே என்று எண்ணித்தான் பரிதாபப் படுகிறோம். இதைவிட 'மனச்சாட்சியைக் கொல்வதற்குப் பரிசு ரூ. 1000'' என்று செய்தி இலாகா விளம்பரம் செய்திருக்கலாம். 'அண்டப்புளுகனுக்கு ஆயிரம் ரூபாய் பரிசு' என்று, சிறுவர் பத்திரிகை ஒன்றில் நெடுநாட்களுக்கு முன்னால் ஒரு கதை வெளிவந்தது. அந்த மாதிரி, ''சிறந்த பொய் எழுதுபவர்களுக்கு ரூ. 1000 பரிசு'' என்று விளம்பரம் செய்திருக்கலாம்.

உண்மையிலேயே இந்த ஐந்தாண்டுத் திட்டத்தின் கொள்கைகளையும் சாதனைகளையும் எழுதப் போகும் நாடக ஆசிரியர்கள், பள்ளித்தேர்விலே தவிக்கும் மாணவர்களைப்போலத்தான் திணற நேரும். பள்ளிப்பாடத்திலாவது விஷயம் இருக்கும். அதை மாணவர்கள் படித்தும் இருப்பார்கள். தேர்வுக் கூடத்திலே வேண்டுமானால் அவர்களுக்கு விடைகள் தோன்றாது. இந்த ஐந்தாண்டுத் திட்ட நாடகம் அப்படியல்லவே! சூன்யப்பிரதேசத்திலிருந்து எதைப் பெறமுடியும்? சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும்!

இந்த ஐந்தாண்டுத் திட்டத்திலே நன்மை என்ன இருக்கிறது? அந்தத் திட்டத்தால் என்ன சாதனைகள் ஏற்பட்டுவிட்டன! விரல் விட்டுக்கூடக் கூற முடியாது. வெறும் கையாலே முழம்போடும் போக்கை மறைத்து, - மழுப்பி,- சிறந்த முறையில் எழுதுவதற்குப் பரிசு தர முன் வருகிறது இந்த சர்க்கார். இதைவிட, நல்ல நாடக ஆசிரியர்களை - மனச்சாட்சி உள்ளவர்களை, பொய் நிகழ்ச்சிகளைப்பற்றி எழுத வைக்கும் குற்றத்தை சர்க்கார்மீது சாட்டுகிறோம். உண்மையிலேயே சர்க்கார்மீது வழக்குப் பதியவேண்டும். வழக்குப்பதியும் விஷயத்தைப் போலீஸ் அதிகாரிகளுக்கு விட்டுவிடுகிறோம். அந்தத் தொண்டினை அவர்கள் செய்வார்களாக!

— **தமிழ்ப்பித்தன்**

கருணையவர்களின் கருத்து படையல்

கருணை உள்ளம்.

படியுங்கள், மகிழுங்கள்,

செல்வி நூற்பதிப்பகம்

12. A. செண்ட்ரல் மார்க்கெட் சந்து, மதுரை

கடலின் பெருமை

அலைகடல் தன்னிடமுள்ள நீரை மேகமாக்கித் தென்றலின் உதவியால் அகிலத்துக்கு மழையாகத் தருகிறது; நதிகளின் மூலம் திரும்பவும் அந்நீரைப் பெற்றுப் பெருமகிழ் வெய்துகிறது.

★

இதைப்போல் நீங்களும் எவ்விதக் கஷ்ட நஷ்டமின்றி நாட்டிற்குப் பணிபுரியும் வாய்ப்பை அடையலாம்.

★ **வீண் செலவைக் குறைப்பது**

★ **சிறுகச் சிறுக ஒரு பாங்கியில் பணத்தைச் சேமித்து வைப்பது**

இப்படிச் சேமித்து வைக்கும் பணம், கடன் வடிவில் உழவர், உழைப்பாளர், வணிகர் முதலியவர்களுக்குப் பயன்பட்டு, கடைசியில் உங்களிடமே வந்து சேருகிறது, வட்டியுடன்!

ஸ்ரீ வெங்கடேஸ்வர பேங்க் லிட்.,

செவ்வாய்ப்பேட்டை, சேலம். 2